நல்லூர் இள நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சங்கையர் மாலைக் கொள்ள கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு



அப்பிரா ஜுவலர்ஸ்
77 செட்டியார் தெரு, கொழும்பு-11.
டெலிபோன். 422839, 434238

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6512 1990 ஜூன் 12 செவ்வாய்க்கிழமை ★ ★ ★ தினபதி

தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்



Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO. 11.
Phone: 422839 434238

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில்

# பொலீஸ் நிலையங்கள் அனைத்தும் புலிகளின் கட்டுப்பாட்டில்

## இராணுவ வீரர்கள் 10 பேர் கல்முனையில் சுட்டு கொலை

கொழும்பு, ஜூன் 11

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இரு மாவட்டங்களி லும் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று தமது கட்டுப்பாட்

ஜீ. சி. ஈ. பரீட்சை எழுத

## தொழிற்பாடத்தில் சித்தி அவசியம்

கொழும்பு, ஜூன் 11

9ஆம ஆண்டுப் பரீட்சையில் தொழில்துறை பாடமொன்றில் சித்தியடைந்த மாணவர்கள் மட்டுமே இனி ஜீ சி ஈ சாதாரண பரீட்சைக்குத் தோற்றலாம-

கல்வி உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி இப்படித் தீர்மானித்துள்ளார்-

இந்தத் திட்டத்தின்படி 9 ஆம ஆண்டு பரீட்சையிலேயே மாணவர்களுக்கு தொழில் துறைத் தேர்ச்சிச் சான்றிதழ் வழங்கப்படும-

அதுவே அங்கீகரிக்கப்பட்ட

(2 ஆம பக்கம பார்க்க)

சோமண்ணை



அரசாங்க ஊழியர்கள்

## ஒய்வு பெற்று ஒரு மாதத்துள் ஒய்வூதியம்: அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா பணிப்பு

கொழுமபு, ஜூன். 11

அரசாங்க ஊழியர் ஒருவர் ஒய்வு பெற்ற ஒரு மாதத்திற்குள் அவருடைய ஒய்வூதியம வழஙகப்பட வேண்டும. அதுவும அவருடைய வழமையான சமபள நாளுக்கு முன்னர் வழஙகப்பட வேண்டும.

அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

தமது அமைச்சில் மொழிப் பிரிவொன்றை ஆரமபித்து உரையாற்றும போது அவரே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும கூறியதாவது-

ஒரு சேவையில் இருந்து இடைநிறுத்தம செய்யப்பட்ட பின் அவர் தொடர்பாக விசாரணை

சங்களில் கடமையாற்றும அரச ஊழியர்களுக்கு விசேட சலுகைகளை வழஙக உத்தேசித்துள்ளேன்.

இந்த ஆலோசனையை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்து இருக்கிறேன்.

இலங்கையில் சமூகங்களி

பிரஸ்தாப பொலீஸ் நிலையங்களில் கடமையாற்றிய பொலீஸ் உத்தியோகத்தர்களின் ஆயுதங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டு அவர்களை அருகில் இருக்கும் ஆயுதப் படை முகாமகளில் ஒப்படைத்தனர்.

ஆல்முனையில் நடந்த சமபவம் ஒன்றில் பத்து இராணுவ வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்ய சென்ற முஸ்லிம பிரஜை ஒருவர் பொலீஸ் நிலையத்தில் வைத்துத் தாக்கப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இதுபற்றி விசாரிக்கச் சென்ற புலிகள் இயக்கப் போராளிகளை நோக்கிப் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம செய்தனர் என்று கூறப்படுகிறது.

இதனை அடுத்து மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தைப் புலிகள் சுற்றி வளைத்தனர். அவர்கள் நேற்றுக் காலை 6 மணியளவில் பொலீஸ் நிலையத்தைக் கைப்பற்றிக் கொண்டதாக புலிகள் இயக்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்புப் பொலீஸ் நிலையத்தில் இருந்த அனைத்து சிங்கள பொலீஸ் உத்தியோகத்தர்களும் அவர்களின் குடுமபத்தினரும விமானப்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

இப்படி அந்த முக்கியஸ்தர் மேலும தெரிவித்தார்.

மட்டக்களப்பு பொலீஸ் நிலையம கைப்பற்றப்பட்டதை அடுத்து மட்டக்களப்பு அமபாறை மாவட்டத்தில் உள்ள சகல பொலீஸாரும ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு

(2 ஆம பக்கம பார்க்க)

உப்பிடிப் பல ... இதுவரை காலக்கெடு வைச்சிட்டினம், ஆனால் காரியம நடக்கவில்லை பாருங்கோ,

சபைகள் மற்றும உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், திரு பெஸ்டஸ் பெரேரா இப்படி

... றேன்

அதே போல் கஷ்ட பிரதே ... களிடையே மோதல்கள் ஏற்பட ...

(2 ஆம பக்கம பார்க்க)

# இராணுவ தளபதி ஐ. ஜி. பி. பறந்து சென்றனர்

கொழுமபு, ஜூன் 11

மட்டக்களப்பு, அமபாறை மாவட்டஙகளில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலையை ஆராய இராணுவ தளபதி ஹமில்டன் வண சிங்ஹ, ஐ ஜி பி அதாவது பொலீஸ் மா அதிபர் திரு எனர்ஸ்ட் பெரேரா நேற்று அங்கு விரைந்தனர்.

[உ—மு]

# மா. சபை உறுப்பினரின் ஜீப் கடத்தப்பட்டது

கொழும்பு, ஜூன் 11

வட மேல் மாகாண சபையின் புத்தளம மாவட்ட உறுப்பினர் டபிள்யூ ஜோர்ஜ் பெர்னாண்டோ பயணம செய்த பெஜ்ரோ ஜீப் செட்டிகுளத்தில் வைத்து ஒரு கோஷ்டியால் கடத்தப்பட்டது.

அவர் பாதுகாப்புக்காக வைத்திருந்த பிஸ்டலும அபகரிக்கப்பட்டது.

திரு ஜோர்ஜ் பெர்னாண்டோவும அவரது குடுமபத்தினரும கடந்த சனிக்கிழமை காலை பெஜ்ரோ ஜீப்பில் மடு கோவிலுக்குச் சென்று கொண்டிருந்த போதே சமபவம நடந்தது.

இது குறித்து திரு பெர்னாண்டோ செட்டிகுளம் பகுதியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளிடம முறைப்பாடு செய்தார்.

சமபந்தப்பட்ட கோஷ்டியினரையும ஜீப்பையும கண்டு பிடிக்கும பொருட்டு நாலா திசையிலும அவர்கள் தீவிர தேடுதல்களை நடத்தினர்.

எனினும முயற்சி பலனளிக்கவில்லை. திரு பெர்னாண்டோவும அவரது குடுமபத்தினரும மதவாச்சி பொலீஸ் நிலையத்திற்குச் சென்று அங்கும் சமபவம குறித்து முறையிட்டனர்.

பின்னர் பொலீஸ் பாதுகாப்புடன் புத்தளம வந்து சேர்ந்தனர்.

[உ—ர—241]

# அரச கரும மொழி சட்டத்தை மீறுவோருக்கு 3 மாத கடூழிய சிறைத் தண்டனை

## ஆணையாளர் தகவல்

கொழுமபு, ஜூன். 11

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவொன்று விரைவில் அமைக்கப்படும, அரச கரும மொழிச் சட்டம அமுலாவதை அந்த ஆணைக்குழு கண்காணிக்கும். சட்டத்தை மீறுவோருக்கு 3 மாத கடூழிய சிறைத் தண்டனை வழஙகப்படும.

அரச கரும மொழித் திணைக்கள ஆணையாளர் திரு நிமல் சமரசுந்தர இப்படிக் கூறினார்.

அரச அதிகாரிகளுக்கு மூன்று மொழிகளையும போதிப்பதற்கான பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்காக பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் தனியான பிரிவு ஒன்று ஆரமபிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரிவு நேற்று அஙகு ராார்ப்பணம செய்து வைக்கப்பட்டது.

அப்போது நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற கண்டவாறு கூறினார்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

திரு சமரசுந்தர மேலும

(2 ஆம பக்கம பார்க்க)

# நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

கொழுமபு, ஜூன், 11

இன்று நாடாளுமன்றம காலை 9 மணிக்குக் கூடுகிறது.

மாகாண சபைகள் திருத்தச் சட்டமூலத்தை பொது நிர்வாக மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா இன்று சபையில் சமர்ப்பிப்பார்.

... மாகாண ... புதிதாகத் தேர்தல் நடத்த இந்தச் சட்ட வரைவு வழி செய்யும.

(உ—ந)

# தமிழ் படிக்க அமைச்சு செயலாளரும் விண்ணப்பம்

கொழுமபு, ஜூன் 11

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கலாநிதி ... குணசேகர தாமும் தமிழ் மொழியை படிக்க வேண்டும் ... அமைச்சின் ... பிரிவுக்கு விண்ணப்பித்துள்ளார்.

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் ஆணையாளர் திரு நிமல் சமர புத்தா இதனை தெரிவித்தார்.

மேற்படி மொழிப் பிரிவை ஆரமபித்து வைக்கும கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்

(2 ஆம பக்கம பார்க்க)

# ஆசிரியர் இடமாற்ற மேன்முறையீட்டுக்கு மாகாண கமிட்டிகள்

கொழுமபு, ஜூன் 11

மாகாண சபை கல்வி அலுவலக மட்டத்தில் ஆசிரியர் இடமாற்றம தொடர்பான மேன் முறையீட்டுக் கமிட்டிகள் அமைக்கப்படும.

கல்விச் சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை கல்விப் பணிப்பாளர்களுக்கு இதற்கான பணிப்புரையை ... கிறது.

ஆசிரியர் இடமாற்றஙகள் இனிமேல் மாகாண சபைகள் மூலமே செயல்படுத்தப்பட விருப்பது தெரிந்ததே.

இதனால் இடமாற்றம தொடர்பான மேன் முறையீடுகளும மாகாண சபை மட்டத்திலேயே கோரப்படும என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் திரு ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்தார்.

சகல மாகாண சபைகளிலும மூவரைக் கொண்ட கமிட்டி

(2 ஆம பக்கம பார்க்க)


# ஹஜ் யாத்திரை 1990

# F. S. F. GROUP

இன்ஷா அல்லாஹ்!

எமது ஹஜ் யாத்திரை குழுவினர் 13-06-90 திகதி காலை புனித ஹஜ் பயணத்திற்காக விமான மேறுகின்றனர். யாத்திரிகர்கள் தமது பாஸ்போர்ட், விமான டிக்கட் மற்றும தஸ்தாவேஜுகளை எமது அலுவலகத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம. தவறுமிடத்து விமான நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம. எனவே யாத்திரீகர்கள் காலை 5-00 மணிக்கு முன்பதாக விமான நிலையத்திற்கு வந்து சேருமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு—

முதலில் ஸியாரத் நிய்யத்துடன் மதீனா சென்று பின்னர் அஙகிருந்து இஹ்றாமுடன் புனித மக்கா திருமப இருப்பதால் இப்போது இஹ்றாம அணிந்துவர வேண்டிய அவசியமில்லை என்பதனை அறியத் தருகின்றோம.

—ஹ. ஜி பாரிஸ் மாஸ்டர்

# F. S. F. TRAVELS

476, D/8 First Floor
Maradana Shopping Centre
Colombo 10
Sri Lanka
Telephone: 698447


நிரந்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

நாட்டின் சகல பகுதிகளிலும் பயிரிடக் கூடிய

# உயர் இன திராட்சைகள்

## விரைவில் அறிமுகமாகும்

அக்குறணை, ஜூன் 11
நாட்டின் சகல பகுதிகளி லும் பயிரிடக்கூடிய உயர் வர்க்க திராட்சை இனங்கள் நான்கு விரைவில் அறிமுகப் படுத்தப் பட உள்ளன-

இவற்றுக்கான கன்று உற் பத்தி பரிசோதனைகள் பேரா தனை தாவர விஞ்ஞான பிரி வினால், குருநாகலில் உள்ள ஆராய்ச்சி பண்ணையில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன-

சுமார் இரண்டு ஏக்கர் நிலப் பரப்பில் இத் திராட்சை இன ங்கள் விருத்தி செய்யப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகின்றன-

இவ்வின திராட்சைகள் இலங்கையில் சகல சுவாத்திய நிலைகளிலும் விளையக் கூடிய வையாகும்-

வீட்டுத் தோட்டங்களிலும், வர்த்தக நோக்கிலும் செய்கை பண்ணக் கூடியதாகவும், அதிக விளைச்சலும் லாபமும் ஈட்டக் கூடியதாகவும் இவை இருக் கும்-

பேராதனை தாவர விஞ் ஞான பிரிவு இப்படி தகவல் தெரிவிக்கிறது-

இவ்வின திராட்சை கன்றுகள் விரைவில் பயிர்ச் செய்கையாளர் களுக்கு விநியோகிக்கப்படுவ தற்கு என ஒழுங்குகள் செய்யப் பட்டு வருகின்றன-

(ல-411)

புலிகளின் அரசியல் ஆலோசகர்

## பாலாவின் குரு யார்? அவரே வெளியிட்டார்

— கே அரசரத்தினம —

யாழ்ப்பாணம ஜூன் 11
என்னைப் புலிகளின் அர சியல் ஆலோசகர் என்கிறார் கள்- பிரபாகரனின் அரசியல் புலி என்றும கூறுகிறார்கள்- ஆனால் எல்லாவற்றுக்கும மேலாக எனக்குக் குரு திரு சிவஞானசுந்தரம (சிவாஜி) என்பதை நான் மறக்க வில்லை-

விடுதலைப் புலிகளின் அர சியல் ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிங்கம இப்படிக் கூறினார்-

திரு சிவஞான சுந்தரத்தின் “சிரித்திரன் சித்திரக் கொத்து” நூல் அறிமுக விழா கடந்த ஞாயிறு மாலை கரவெட்டி இரு தயக் கல்லூரியில் நடைபெற் றது-

கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலை வர் திரு த சிதம்பரமபிள்ளை விழாவுக்குத் தலைமை வகித் தார்-

டாக்டர் அன்டன் பால சிங்கம் சிறப்பு விருந்தினராக இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார்-

அவர் தொடர்ந்து கூறிய தாவது—

இலங்கை இராணுவமும இந் திய இராணுவமும துரோகக் கும்பல்களும தமிழினத்தின் களை அவர் ஊட்டினார்-

18 வயதில் நான் வேலை இல்லாது இருந்தேன் கொழும்பு மாநகரசபை நூல் நிலையத்துக் குச் சென்று சித்தாந்த நூல் களைப் படித்து வந்தேன்-

திரு சிவஞானசுந்தரம “சித் தாந்தம படித்த அறிவாளியாக வரக் கூடியவராக நீர் இருக்கி றீர்- உமது பணி தொடரட் டும” என்று அன்று என்னைப் பார்த்துக் கூறினார்-

அவருடன் நான் நெருங்கிப் பழகினேன்- அவர் எனக்கு எல்லா வகைகளிலும் உதவி னார்- ஒத்துழைப்பும வழங்கி னார்-

இப்படி டாக்டர் அன்டன் பாலசிங்கம கூறினார்-

ஓய்வு பெற்ற அதிபர் திரு வின்ஸன் ஆசியுரை வழங்கி னார்-

“கரவெட்டியில் பிறந்தவர் திரு சிவஞானசுந்தரம- இதே பாடசாலையில் படித்தவர்- அவருக்கு விழா எடுப்பதில் நாம பெருமைப்படுகிறோம” என்று தமது ஆசியுரையில் அவர் குறிப்பிட்டார்-

திரு க பாண்டிதாசன், திரு ப குணபதிப்பிள்ளை திரு அ மாணிக்கவாசகர் ஆகியோர் மங கள விளக்கேற்றி விழாவினை ஆரமபித்து வைத்தனர்-



மசவா வனிதா மருத்துவ முகாம

போக்குவரத்து, பெருந் தெருக்கள் அமைச்சின் சேவா வனிதா பிரிவு, மினுவன் கொடை ஹீனட்டியான, பொத்துகுல்விஹா ரையில் அண்மையில் மருத்துவ முகாம ஒன்றை நடத்தியது-

அகில இலங்கை சேவா வனிதா பிரி வுத் தலைவியான திருமதி ஹேமா பிரேம தாச, முகாமில் சிகிச்சை பெற வந்த திருமதி விலி குணசேக்கரா என்ற பெண்மணியிடம அவரது உடல் நிலை பற்றி விசாரிக்கின் றார்-

போக்குவரத்து, பெருந் தெருக்கள் அமைச்சர் திரு டி விஜேபால மெண்டிஸ் அருகில் காணப்படுகிறார்- (எ*ச)

## தொழிற்பாட...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
ஆகக் குறைந்த சான்றிதழா கும-

சாதாரண தரப் பரீட்சை யில் சித்தியடையா விட்டாலும தொழில்துறை ஒன்றில் கல் வியை தொடர்வதாக இந்த கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி மதுலவித்தார்-

கொழும்பில் கருத்தரங்கு ஒன்றில உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித் தார்-

## தமிழ் படிக்க...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
தார்-

இந்தக் கூட்டத்தில் உரை யாற்றிய கலாநிதி குணசிங்க கூறியதாவது—

நாம பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற மொழிகளை சில வேளை அறிந்திருந்தாலும இந்த நாட்டில் எமமோடு வாழும

## கடவுச் சீட்டு வழங்கும் அலுவலகம்

அக்குறணை ஜூன் 11
கண்டியில் கடவுச் சீட்டு [பாஸ்போர்ட்] வழங்கும பிராந்திய அலுவலகம ஒன்று விரைவில் திறந்து வைக்கப் பட உள்ளது-

இந்த அலுவலகத்தில் முத லில் மத்திய கிழக்கு நாடுகளுக் கான கடவுச் சீட்டுக்கான விண் ணப்பங்களே ஏற்றுக் கொள் ளப்பட உள்ளன-

முன்னர் கண்டிப் பிராந்திய குடிவரவு - குடியகல்வு அலுவல கம கண்டி மாவட்ட செயலகத் துக்கு அண்மையில் உள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தி லேயே இயங்கி வந்தது-

பின்னர் பிராந்திய அலுவ லகங்கள் மூடப்பட்டன- தற் போது திறக்கப்பட உள்ள அலுவலகம கண்டி பேராதெனிய வீதியில் உள்ள முல்கம்பல பகுதி யில் இருக்கும் ஓர் கட்டிடத்தில் இயங்க உள்ளது-

[ல—411]

## பொலிஸ்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
நேற்று நண்பகல் 2-15 மணிக்கு முன்னர் வெளியேற வேண்டும ஏறாவூர், கல்குடா களுவாஞ் சிக்குடி, வெள்ளாவெளி ஆகிய பொலிஸ் நிலையங்களில் இரு ந்த பொலீஸார் அனைவரும என புலிகள் உத்தரவு பிறப்பித்த னர்-

பிரஸ்தாப உத்தரவை அடுத்து மட்டக்களப்பு மாவட் டத்தில் உள்ள வாழைச்சேனை, ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு வெளியேறினர்-

அமபாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை பொத்துவில், அக்கரைப்பற்று, சென்றல்காமப் ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்தும பொலீஸார் வெளி யேறி விட்டதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித் தன-

களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமை புலிகள் சுற்றி வளைத்த வேளையில் இரு தரப் பினருக்கும இடையில் கடுமை யான மோதல் ஏற்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன- எனினும சேத விபரம உடனடியாகத் தெரியவில்லை-

கல்முனையில் நேற்றுக் காலை 11 மணியளவில் டிரக் ஒன்றில் சந்தைக்கு சென்று விட்டு திரும பிக் கொண்டிருந்த இராணுவத் தினர் மீது துப்பாக்கிப் பிரயோ கம மேற்கொள்ளப்பட்டது-

பிரஸ்தாப டிரக்கில் இருந்த

## இன்றைய திரைகளில்

2 வது வாரம

கெப்பிட்டல்
(கொட்டாஞ்சேனை)
10-30, 2-30, 6-00, 9-30

ரியோ
(கொம்பனித்தெரு)
(குளிரூட்டப்பட்டது)
வெள்ளி முதல் திங்கள் வரை
காட்சி நேரங்கள்
10-30, 2-30 6-00, 9-00
செவ்வாய் முதல் வியாழன் வரை
காட்சி நேரங்கள்
10-30, 2-30, 6-00

ராணி
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00, 9-00

கமல்ஹாசன் — அமலா நடித்த
**சத்யா**
(கலர்)

3 வது வாரம

செல்லமஹால்
(கொட்டாஞ்சேனை)
2-30, 6-00, 9-30

கொன்கோட்
(தெகிவளை)
10-30, 2-00, 6-00, 9-00

மனோகரா
(யாழ்நகர்)
10-30, 2-00, 6-00, 9-00

ரஜனிகாந்த் — கௌதமி
பேபி ஷாலினி — வி கே ராமசாமி
நடித்த
ஏ வி எமமின்
**ராஜா சின்ன ரோஜா**
(கலர்)

4 வது வாரம!

முருகன்
(ஜிந்துப்பிட்டி)
2-15, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-15

சுபராஜ்
(மட்டக்களப்பு)
2-30, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-30

விஜிதா

கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு த சிதம்பரம்பிள்ளை விழாவுக்குத் தலைமை வகித்தார்-

டாக்டர் அன்டன் பால சிங்கம் சிறப்பு விருந்தினராக இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார்-

அவர் தொடர்ந்து கூறியதாவது—

இலங்கை இராணுவமும் இந்திய இராணுவமும் துரோகக் கும்பல்களும் தமிழினத்தின் மீது வெறியாட்டம் நடத்திய போது கவலையில் மூழ்கி இருந்தோரை அதிலிருந்து விடுவித்து சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தவர் திரு சிவஞானசுந்தரம்-

இளைஞர்களுக்கு நகைச்சுவை மூலம் நல்ல கருத்துக்...

"கரவெட்டியில் பிறந்தவர் திரு சிவஞானசுந்தரம்- இதே பாடசாலையில் படித்தவர்- அவருக்கு விழா எடுப்பதில் நாம் பெருமைப்படுகிறோம்" என்று தமது ஆசியுரையில் அவர் குறிப்பிட்டார்-

திரு க பாண்டிதாசன், திரு ப குணபதிப்பிள்ளை திரு அ மாணிக்கவாசகர் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தனர்-

கம்பன் கழகத் தலைவர் திரு ஜெயராஜ் புலவர் பாரதி நாதசிவம் திரு ஆனந்தராஜா, கவிஞர் காசி ஆனந்தன் மற்றும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளும் விழாவில் கலந்து கொண்டனர்-

[உ—ந—120]


மக்கா
டிரவல்
சேர்விஸ்
MAKKAH
TRAVEL
SFRVICE

எமது ஹஜ் குழுவில்
ஹஜ் யாத்திரைக்குச் செல்லும்
ஹஜ்ஜாஜிகள்
இன்ஷா அல்லாஹ்
15.6.90 காலை 9 மணிக்கும்
22.6.90 காலை 9 மணிக்கும்
சவூதியா விமான மூலம்
புனித மக்கா நோக்கிப் புறப்படுவர்

தாம் செல்லும் திகதிகளில் ஹாஜிமார் காலை 5 மணிக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்-

மக்கா டிரவல் சேர்விஸ்
147/1 மெலிபன் வீதி
கொழும்பு—11
தொலைபேசி 29654 — 33221


# தொழிற்பாட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கக் குறைந்த சான்றிதழாகும்-

சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையா விட்டாலும் தொழில்துறை ஒன்றில் கல்வியை தொடர்வதே இந்த புதிய திட்டத்தின் நோக்கமாகும் என கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்-

இதன் மூலம் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையா விட்டாலும் மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி கற்று பட்டம் பெறலாம்-

இனிமேல் தொழிற்றுறை பயிற்சி கட்டாயமாவதோடு அதற்குத் தகுந்த அங்கீகாரமும் வழங்கப்படும் என கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்-

கொழும்பில் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்-

ஆரம்ப வகுப்பில் சேரும் மாணவர்களில் 80 சதவீதத்தினர் ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு பின்னர் கல்வி கற்பதில்லை-

1.5 வீதத்தினர் மட்டுமே பல்கலைக்கழகங்களில் சேர்கிறார்கள்-

இதனால் மாணவர்கள் மத்தியிலும் பெற்றோர்கள் மத்தியிலும் அமைதியின்மை ஏற்படுகிறது-

இப்படி அமைச்சர் கூறினார்-

[உ—ற]

# அரச கரும...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாவது-

மொழிப் பிரச்சினை இந்த நாட்டில் குழப்பங்களுக்கும், பதற்றத்திற்கும் காரணமாக அமைந்துள்ளது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் காரணமாக சிங்களமும், தமிழும் அரச கரும மொழிகளாக சட்டமாக்கப்பட்டுள்ளன.

ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருந்த போதிலும், முக்கியத்துவத்தை பொறுத்த வரையில் அதுவும் அரச கரும மொழியைப் போலவே கருதப்பட வேண்டியிருக்கிறது.

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவொன்றை அமைக்க வரைவில் நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வரப்படும்.

சட்டவரைவு தற்போது சட்ட வரைஞரால் வரையப்பட்டு வருகிறது.

அதன்படி அரச கரும மொழிச் சட்டத்தை மீறுவோருக்கு 3 மாத கடூழியச் சிறைத் தண்டனை அல்லது 1000 ரூபா அபராதம் விதிக்கப்படும்.

கொழும்பிலுள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றில் இரண்டு அரச கரும மொழிகளையும் முறையாக அமுலாக்க தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் மொழி பெயர்ப்பாளர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லை.

முதலில் அரசாங்க அதிகாரிகளுக்கு மொழிப் பயிற்சி வழங்குவதற்கே ஆரம்ப பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் நாளொன்றில் ஒரு மணித்தியாலயம் தமிழும், ஒரு மணித்தியாலம் ஆங்கிலமும் போதிக்கப்படும். வடக்கு, கிழக்கில் இதே போல் சிங்களமும், ஆங்கிலமும் போதிக்கப்படும்.

ஒரு வருடத்திற்குள் 108 மணித்தியாலங்கள் இவ்வாறு பிறமொழி போதிக்கப்படும்.

இறுதியில் பரீட்சை நடத்தப்படும். அதில் சித்தியடைவோருக்கு 500 ரூபா கொடுப்பனவும் சான்றிதழும் வழங்கப்படும்.

இந்தப் பாடத் திட்டம் 10 வகுப்புக்களைக் கொண்டதாகும் 10 வகுப்புக்களிலும் பரீட்சை நடத்தி சித்தி அடைவோரின் சம்பளம் 150 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

இப்படி அவர் கூறினார்.

(உ-ற).

# தமிழ் படிக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்-

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய கலாநிதி குணசிங்க கூறியதாவது—

நாம் பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற மொழிகளை சில வேளை அறிந்திருந்தாலும் இந்த நாட்டில் எம்மோடு வாழும் மக்கள் தொகையில் 30 சதவீத மக்களின் மொழியான தமிழ் மொழியை அறியாதிருக்கிறோம்-

இந்த குறைப்பாட்டை நீக்க வேண்டும்-

இந்த மொழிப் பிரிவில் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்- அதற்காக நாளை 50 புத்தகங்களை வழங்கவேண்-

இப்படி அவர் கூறினார்-

(உ—ற)

# ஓய்வு பெற்று...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன.

ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள தமது மொழிக்கு புறம்பாக மற்றவருடைய மொழியையும் அறிந்திருக்க வேண்டும்.

மனிதர்கள் எல்லோரும் ஒரேவிதமாக சிந்திக்க மாட்டார்கள். அதில் தவறொன்றுமில்லை. ஆனால் ஒருவர் எப்படி சிந்திக்கிறார் என்பதை மற்றவர் அறிந்திருக்க வேண்டும். அதற்காக மற்றவருடைய மொழியை அறிந்திருக்க வேண்டும்.

சர்வகட்சி மாநாட்டின் போது இந்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

அதனால்தான் 3 மொழிகளையும் மக்கள் படிக்க வேண்டும் என ஜனாதிபதி கூறி இருக்கிறார்.

இப்படி அவர் கூறினார்,

(ல-ற)

# ஆசிரியர் இட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை அமைக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது-

இந்தக் கமிட்டிகள் மேன்முறையீடுகளை பரிசீலனை செய்யும்- சிரேஷ்ட அதிபர் ஒருவரையும் கல்விப் பணிப்பாளர் ஒருவரையும் அந்த கமிட்டிக்கு நியமிக்குமாறும் மாகாண சபைகள் கேட்கப்பட்டுள்ளன-

(உ-வ)

அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன- எனினும் சேத விவரம் உடனடியாகத் தெரியவில்லை-

கல்முனையில் நேற்றுக் காலை 11 மணியளவில் டிரக் ஒன்றில் சந்தைக்கு சென்று விட்டு திரும்பிக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது-

பிரஸ்தாப டிரக்கில் இருந்த 10 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்- அவர்களிடம் இருந்து 9 தன்னியக்கத் துப்பாக்கிகளும் அபகரிக்கப்பட்டன-

இச்சம்பவங்களை அடுத்து மட்டக்களப்பு கல்முனைப் பகுதியில் சகல போக்குவரத்துச் சேவைகளும் தடைப்பட்டன- அரசாங்க அலுவலகங்கள் பாடசாலைகள் கடைகள் ஆகியன பூட்டப்பட்டன-

எங்கும் பதற்றமும் பீதியும் நிலவின-

புலிகள் இயக்கத்தினர் பாதையில் ரோந்துச் சேவையில் ஈடுபட்டதாக அப்பகுதியில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன-

[உ—மு—404—281]


* இந்திய ஜனாதிபதியால் தங்கப் பதக்கம் பெற்ற சித்திரம்.
* பேசும்படம் பத்திரிகையால் சிறந்த படம் என்று பாராட்டிதழை பெற்ற சித்திரம்

கிங்ஸ்லி
(கொழும்பு)
10-30, 2-30, 6-00, 9-30

ஈரோஸ்
(பாணந்துறை)
10-30, 2-30, 6-00, 9-30

வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00, 9-30

ரகுவரன் — லட்சுமி
சந்திரசேகர் — மாதுரி
விசு — மனோரமா
நடித்த
ஏ வி எம் மின்
சம்சாரம்
அது
மின்சாரம்

முருகன்
(ஜிந்துப்பிட்டி)
2-15, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-15

சுபராஜ்
(மட்டக்களப்பு)
2-30, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-30

விஜிதா
(ஹட்டன்)
2-30, 6-30
சனி/ஞாயிறு 10-30

பயங்கர சண்டைக் காட்சிகளும், இனிமையான பாடல்களும் நிறைந்த சித்திரம்
அர்ஜுன் — சசிகலா
சீதா — செந்தில்
பேபி ஷாலினி — சரத்பாபு
நடித்த
சங்கர் குரு
(கலர்)

9 வது வாரம்
வின்சர்
(யாழ்நகர்)
[illegible]
10-30, 2-30, 6-00, 9-30

நியூ திவொளி
(நுவரெலியா)
10-20, 2-30, 6-00

பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த
இது நம்ம ஆளு
[கலர்]

10 வது வாரம்
ஸ்ரீதர்
(யாழ்நகர்)
இன்று மட்டும்
10-30, 2-30, 6-00

தாஜ்மஹால்
(மாத்தளை)
10-0, 2-00, 6-00
14 ஆம் திகதி முதல்
கிருஷ்ணா
(பேருவளை)
ரஜனிகாந்த — ராதிகா
நடித்த
சத்யா மூவிஸ்
ஊர்க்காவலன்
(கலர்)

# நான் பாராட்டுக்காக படம் எடுக்க வில்லை:

## எஸ். பி. முத்துராமன்

பல வெற்றிப் படங்களை இயக்கியவர் எஸ் பி முத்துராமன்- வெற்றிபெற்ற போது கர்வம கொள்ளாமலும தோல்வி கண்டபோது துவண்டு விடாமலும கடமையே கண்ணாய் இருப்பவர் இவர்!

அவரை பேட்டி காணும சந்தர்ப்பம அண்மையில் உண்டானது-

"நீங்கள் இயக்கும படங்கள் எல்லாம பெரிய நட்சத்திரங்களும பெரிய நிறுவனமுமாக இருப்பதால படம வெற்றி பெறும போது இயக்குனருக்கு கிடைக்க வேண்டிய பாராட்டு கிடைக்காமல் போய் விடுகிறது என்கிறார்களே சரியா?"

"பாராட்டுக்காகவோ பெருமைக்காகவோ நான் இயக்கவில்லை- அந்த எதிர்பார்ப்பும எனக்குக் கிடையாது-

நான் எடுத்துக் கொண்ட விஷயத்தை சரியாகச் செய்திருந்தாலே போதும... மற்றவர்கள் எடுத்துக் கொண்ட மாதிரி புதிய முயற்சியோ தொல்லையோ எடுத்துக் கொள்ளவில்லை-

கமல் ரஜனி மாதிரி பெரிய நட்சத்திரங்களின் படங்களையே நான் இயக்குகிறேன்... அப்போது அந்த நட்சத்திரங்களின் ரசிகர்களைத் திருப்திப் படுத்தவே முயற்சி எடுத்துக் கொள்கிறேன்-

பெரிய நிறுவனப் படங்களை இயக்கும போது ரசிகர்களிடையே அந்தப் படத்துக்கு அதிக எதிர்பார்ப்பு உண்டாகி விடுகிறது- அப்போது அந்த எதிர்பார்ப்பை ஈடு செய்வே முயற்சிக்கிறேன்-"

"முன்பு நல்ல கதையமசம உள்ள படங்களை இயக்கி வந்த நீங்கள் இப்போது முழுக்க முழுக்க மசாலாப் படங்களை மட்டுமே இயக்கி வருவது ஏன்?"

"நல்ல படங்களைக் கொடுக்க கூடாது என்ற எண்ணமெல்லாம எனக்குக் கிடையாது- "உயர்ந்த உள்ளம" போன்ற மசாலாப் படங்களை இயக்கி வரும போதே "ஸ்ரீ ராகவேந்திரர்" போன்ற நல்ல படங்களையும நான் இயக்கத் தவறியதில்லை-

ஆனால் ஒரு விஷயம படம எடுத்து சிறப்புப் பரிசு வாங்கும் எண்ணமெல்லாம எனக்குக் கிடையாது...



எஸ் பி முத்துராமன்

புரிந்து கொள்ள வேண்டும"

"நீங்கள் வியாபாரம என்று எண்ணிக் கொண்டு படங்களில் கவர்ச்சிக்கும அடி தடிக்கும முக்கியத்துவம கொடுப்பதால் சமூகத்தில் பாதிப்பு உண்டாகிறது என்ற எண்ணம தோன்றவில்லையா?"

"திரைப்படத்தை நுணுக்கமாகப் பார்த்த காலம போய் விட்டது- திரைப்படத்தினால் பாதிப்பு உண்டாகும என்ற விஷயத்தை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்- இந்த மீடியா ஒரு பொழுதுபோக்குச் சாதனம் மட்டுமே!

என்னுடைய பல படங்களில் நல்ல கருத்துக்களைக் கூறி இருக்கிறேன்- அதைப் பார்த்து திருந்தி விட்டார்கள் என்று நான் எடுத்துக் கொள்ள ...? திரைப்படத்தை விட உண்மை வாழ்க்கை மிகுந்த ஆபாசமும பழிவாங்கும உணர்ச்சியும மிகுந்து காணப்படுகிறது என்றே எனக்குத் தோன்றுகிறது-

என்னுடைய படங்களில் அடி தடி சண்டை நடனம இருக்கிறது- ஆனால் எந்த ஒரு தனி மனிதனையோ சமுதாயத்தையோ தவறான வழிக்குத் தூண்டுவதாக மட்டும இருக்காது!

இப்படி அவர் தெரிவித்தார்-

(இ—17)



வேலியின்றி தோளில் தொற்றிக் கொண்டிருக்கும கிளிக்கு தாலி பாக்கியம கிடைத்து விட்ட மகிழ்ச்சியோ? (முரளி — ரோகிணி) (படம- சிலமபு) (இ-10)

## மடிசார் புடைவையில் சிலுக்கு நடனம்

"கும்பகோணம காபி கிளப்" என்ற ஹோட்டலில் "சிலுக்கு" மடிசார் புடைவை கட்டிக் கொண்டு நின்றார்.

---

கண்டி

# பதியுத்தீன் கல்லூரிக்கு கலாசார நிலையம்

## ஈரான் அரசு நிர்மாணிக்கும்

கண்டி, ஜூன் 10

ஈரான் இஸ்லாமியக் குடியரசு கண்டி பதியுத்தீன் மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு எட்டு லட்சம ரூபா செலவில் இஸ்லாமிய கலாசார நிலையம ஒன்றை நிர்மாணித்துக் கொடுக்கும.

இந்தக் கல்லூரிக்கு அண்மையில் விஜயம செய்த இலங்கையில் உள்ள ஈரான் நாட்டின் தூதுவர் அப்துல் ரீஸா பராஜித்ராய் இந்த உறுதியை வழங்கினார்.

1800 மாணவர்கள் கல்வி பயிலும இந்த கல்லூரியில் மாணவிகள் தொழுவதற்கென ஒரு பிரத்தியேக அறை கிடையாது.

மற்றும சமயம சமபந்தமான வைபவங்களை நடத்தவும இங்கு இட நெருக்கடி நிலவுகின்றது.

இந்தக் குறையைத் தவிர்க்கவே ஈரான் தூதரகம முன்வந்துள்ளது.

கட்டிட நிர்மாணப் பணிகளுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள கட்டிட வரைவுகள் தூதரகம மூலம ஈரான் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது-

இப்படி கல்லூரி அதிபர் செல்வி பௌஸியா எச் மூன் தினபதிக்குத் தெரிவித்தார்.

(ரி—017)

---

இந். வம்சாவளியினர் பிரச்சினை:

# தொழிற் சங்க அரசியல் அமைப்புகளுடன் முதலில் பேச்சு நடத்துக

## ஐ. மு. பொதுச் செயலாளர்

அட்டன், ஜூன் 10

இந்திய கடவுச்சீட்டு பெற்று இலங்கையில் தங்கியுள்ள இந்திய வமசாவளி மக்களின் எதிர்காலம குறித்து இந்தியா, இலங்கை அரசுடன் பேசி ஒரு இணக்கத்திற்கு வருமுன் மலையகத்திலுள்ள தொழிற்சங்க, அரசியல் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும.

புதிய ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் திரு ஏ இளஞ்செழியன் இவ்வாறு கூறினார்.

... நடந்து கொள்ளாமல், இந்திய வமசாவளியினர் பற்றி இணக்கம ஏதும ஏற்படும முன்னர் அவர்களுடைய தலைமைகளை கலந்தாலோசிக்க வேண்டும.

இவ்வாறு திரு இளஞ்செழியன் கேட்டுக் கொண்டார்.

(ரி—096)

---

# செட்டிகுளம் உபதபாலகம் தரம் உயரும்

கொழும்பு, ஜூன் 11

செட்டிகுளம உப தபாலகம தரம உயர்த்தப்பட இருக்கின்றது.

வவுனியா தபால் திணைக்கள அத்தியட்சகர் இது விடயம தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவனத்திற்கு கொண்டு வந்ததையிட்டு மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே ஆர் குகனேஸ்வரன் இது விடயமாக தபால், தொலை தொடர்பு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தமையால் செட்டிகுளம உப தபால் நிலையம தரமுயர்த்தப்படவுள்ளது.

இதற்காக அரை ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது-

தற்போது மக்கள் வவுனியா, மதவாச்சி, முருங்கன் ஆகிய இடங்களுக்குச் சென்றே தமது தபால் சமபந்தமான கருமங்களை செய்து வருவது குறிப்பிடத்தக்கது-

(ரி—404)

---



### வர்த்தக அமைச்சின் நடமாடும் சேவை

வியாபார, வர்த்தக அமைச்சின் நான்காவது நடமாடும சேவை அண்மையில்கேகாலை நகர சபை மண்டபத்தில் இடமபெற்றது-

அப்போது அம மாவட்டத்திலுள்ள சிறு வியாபாரிகள் எதிர்நோக்கும பொதுவான பிரச்சினைகள் பற்றி கேகாலை மாவட்ட கைத்தொழில் வியாபார சங்கத் தலைவர் ஜனாப் எஸ் எம ஹுஸைன் அமைச்சரிடம எடுத்துக் கூறிய போது எடுக்கப்பட்ட படம- (ரி)

---

# மாத்தளையில் பரவும் பல்வேறு நோய்கள்

---

# வெலிகமத்தில் கண் நோய்

வெலிகாமம, ஜூன் 10

வெலிகாமம நகரிலும...

களையும் நான் இயக்கத் தவறி யதில்லை.

ஆனால் ஒரு விஷயம் படம் எடுத்து சிறப்புப் பரிசு வாங்கும் எண்ணமெல்லாம் எனக்குக் கிடையாது.

என்னுடைய லட்சியமெல்லாம் படத்தின் வசூல்தான்! புதுமை செய்கிறேன்... கருத்து சொல்கிறேன் என்று கூறியவர்களெல்லாம் படப்பிடிப்பு நிலையத்திற்கு வெளியே நிற்கிறார்கள் என்பதை நான் கண்கூடாக பார்த்துக் கொண்டுதானிருக்கிறேன். இதெல்லாம் பேசுவதற்கு நன்றாக இருக்கும். ஆனால் நடைமுறையில் தூசப்பான விஷயங்கள் என்பதைப்

## சிலுக்கு நடனம்

"கும்பகோணம் காபி கிளப்" என்ற ஹோட்டலில் மனோ, கவுண்டமணி, செந்தில் ஆகிய மூவரும் ஹோட்டலுக்கு வந்தார்கள்.

அவர்களைப் பின் தொடர்ந்து "சில்க்" சுமிதாவும் வந்தார். மூன்று பேரையும் மடக்கிப் போட "சிலுக்கு" முடிவு செய்தார்.

மனோ, கவுண்டமணி செந்தில் மூன்று பேரும் சாப்பிடுவதற்காக இலை போட்டு அமர்ந்தார்கள்.

அப்போது அவர்கள் முன்பு "சிலுக்கு" மடிசார் புடைவை கட்டிக் கொண்டு நின்றார்.

அந்த ஹோட்டலின் முதலாளி போல் காட்டிக் கொண்டு, சாப்பாடு போட்டார்.

"மாமி மாமி மஜா, மாமா தொட்டா மஜா மஜா" என்று பாட்டுப்பாடி ஆடினார்.

இந்தக் காட்சி தெய்வமாதா மூவிசின் "மூன்று பிரும்மாக்கள்" படத்துக்காக படமாக்கப் பட்டது.

இதி கிட்டி, கே பிரபாகரன் தினேஷ் கே நடராஜ்,



சில்க்சுமிதா

கே எஸ் செல்வராஜ் சித்ரா ஆகியோர் நடிக்கிறார்கள்.

பாபு ஒலிப்பதிவு செய்கிறார். சங்கர் கணேஷ் இசை அமைக்கிறார்கள்.

கதை, திரைக்கதை வசனம், டைரக்ஷன் பொறுப்புகளை டி. எஸ் கிருஷ்ணகுமார் கவனிக்கிறார்.

மௌனம் ரவி மேற்பார்வையில் கே ராஜா தயாரிக்கிறார்.

இது ஒரு குறுகிய காலத் தயாரிப்பு ஆகும். (இ-10)

## புதுமுகம் விக்ரம் நடிக்கும் படம்

தமிழ்ப்பட ரசிகர்களுக்கு பல வெற்றிப் படங்களை அளித்த ஸ்ரீதர், "தந்து விட்டேன் என்னை" என்ற பெயரில் புதிய படம் ஒன்றை டைரக்ட் செய்கிறார்.

"சித்ராலயா" நிறுவனம் நீண்ட இடைவெளிக்குப் பின் தயாரிக்கும் படம் இது.

கதாநாயகனாக விக்ரம் என்ற புது நடிகர் அறிமுகமாகிறார். அவருக்கு ஜோடியாக ரோகிணி நடிக்கிறார்.

தினபதி சினிமா

ராஜேஷ்குமார், பிரசன்னா, மனோரமா, ரமாபிரபா கமலா காமேஷ் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு தொடங்கி தொடர்ந்து நடை பெறுகிறது.

சிவா ஒளிப்பதிவு செய்கிறார்.

இளையராஜா இசை அமைக்கிறார்.

ஸ்ரீதர் "சித்ராலயா" சார்பில் தயாரிக்கும் மற்றொரு படம், "மாங்குயிலே பூங்குயிலே"

இதில் ராமராஜன் கதாநாயகனாக நடிக்க, கங்கை அமரன் டைரக்ட் செய்கிறார்.

இளையராஜா இசை அமைக்கிறார்.

இரு படங்களின் தயாரிப்பு நிர்வாகத்தையும் சித்ராலயா கோபு கவனிக்கிறார். (இ-10)

நடத்த வேண்டும்.

புதிய ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் திரு ஏ இளஞ்செழியன் இவ்வாறு கூறினார்.

அண்மையில் அட்டன் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகத்தில் நடைபெற்ற இந்திய கடவுச்சீட்டுடன் இலங்கையில் தங்கியிருப்போரின் எதிர்காலம் பற்றிய கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

மலையக மக்கள் ஐக்கிய முன்னணி ஏற்பாடு செய்திருந்த இக்கூட்டம் லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதி ஜனாப் ஹமீட் தலைமையில் நடைபெற்றது.

சொந்த நலன் கருதி இந்தியா இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களால் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினர் எவ்வித நன்மையும் அனுபவிக்கவில்லை.

இந்தியா இனிமேலும் இப்படி

## தென்னைகளிடை மிளகு நடப்படும்

பண்டுவஸ்நுவர, ஜூன் 10

பண்டுவஸ்நுவர தொகுதியில் தென்னந் தோட்டங்களில் இரண்டு லட்சம் மிளகுக் கன்றுகள் நடப்பட உள்ளன.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை வட மேல் மாகாண சபை விவசாய உணவு கூட்டுறவுத் துறை அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

தென்னந் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு இலவசமாகவும், நியாயமான விலைக்கும் மிளகுக் கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்படும். (ரி-138)

## மாத்தளையில் பரவும் பல்வேறு நோய்கள்

அக்குறணை, ஜூன் 10

மாத்தளை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் அம்மை, காலரா (வயிற்றோட்டம்), விஷக் காய்ச்சல், மலேரியா, சுக்கல், இருமல் போன்ற தொற்று நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

வில்கமுவ, செம்புவத்த, எல்கடுவ, நிககொல்ல போன்ற பகுதிகளில் வயிற்றோட்டம் பரவி வருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தினமும் புதுவித காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்காக மாத்தளை அரச வைத்தியசாலைக்கும், ஏனைய கிராமிய அரச வைத்தியசாலைகளுக்கும் நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் சென்ற வண்ணம் உள்ளனர்.

யடவத்த, செபகம, மாத்தளை பகுதியிலேயே கூடுதலானோர் இக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு வருகின்றனர். மாத்தளை விஜய வித்தியாலய புனர்வாழ்வு முகாமில் உள்ள சிலர் அம்மை நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். ஹதுன்கமுவ, தம்புள்ள, கலேவலை போன்ற பகுதிகளில் மலேரியா காய்ச்சல் மீண்டும் தலைகாட்டி வருவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

லக்கலை, ஹெட்டிபொல, அமுனுயாய, வாவவெல, இஹலகம, எடிபொல, படிவிட, கொன்கஹமுல, யடிவத்த போன்ற பகுதிகளிலும் காலரா பீடிக்கப்பட்ட பலர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய்களில் இருந்து காப்பாற்றிக் கொள்ள போதிய சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது சம்பந்தமாக பொது மக்களது கவனத்தையும் தகுந்த முறையில் செலுத்துமாறு மாத்தளை சுகாதார வைத்திய அத்தியட்சகர் டாக்டர் லலித் திசாநாயக்க கேட்டுள்ளார். (ரி-411)

## வெலிகமத்தில் கண் நோய்

வெலிகாமம், ஜூன் 10

வெலிகாமம் நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மீண்டும் கண் நோய் மிக வேகமாகப் பரவி வருகிறது.

இந்நோயினால் பாதிக்கப்பட்டோர்களில் பெரும் பகுதியினர் வெலிகாமம் றுஹுணு கண் ஆஸ்பத்திரிக்கும், தனியார் துறை வைத்திய நிலையங்களுக்கும் சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-331)

## பொலிதீன் உறைகளில் பிரேதங்கள் அடக்கம்: சூழல் மாசுபடும்

கண்டி, ஜூன் 10

பொலிதீன் உறையுள் பிரேதங்களைப் போட்டு அடக்கம் செய்வதால் கண்டி மகியாவை, மாவில்மடை ஆகிய நகரப்புற சேமக்காலைப் பிரதேச சூழல்கள் மாசுபடுகின்றன. அவ்வாறு ஏற்படாமல் பொலிதீன் உறைகளைத் தவிர்த்து பிரேதங்களைப் புதைக்க மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படிக் கோரினார் கண்டி மாநகர சபை உறுப்பினர் திரு என் பி மாவில்மட (ஐ தே க) கண்டி மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேயர் திருமதி சந்திரா ரணராஜா கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

அவர் தொடர்ந்து பேசியபோது கூறியதாவது:

"இலங்கை பூராவும் பொலிதீன் உறைகள் தாராளமாக உபயோகிக்கப்படுகின்றன.

பால் மா, உணவுப் பொருட்கள் உட்பட பலதரப்பட்ட ஷொப்பிங் பைகள் முதலானவை மக்களால் உபயோகிக்கப்பட்டு வீட்டின் சுற்றுப் புறச் சூழல்களில் எறிந்து விடப்பட்டுகின்றன.

காலப் போக்கில் மண்ணோடு அவை கலக்கப்பட்டும் எத்தகைய கெடுதலும் இன்றி பொலிதீன் உறைகள் மண்ணுள் புதைந்து காணப்படுவதால் மரம், செடி, கொடிகளின் வளர்ச்சிக்கும் அவை தடையாக இருக்கின்றன.

இதனால் சுற்றுப்புறச் சூழல் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. நகரப் புறங்களில் இதன் மூலம் ஏற்படும் அபாயம் பாரதூரமானது. இவ்வாறான கழிவு பொலிதீன் பைகளை எரித்து விட வேண்டும் என மக்களைக் கோருவது நல்லது.

இப்படி அவர் மேலும் கூறினார். (ரி-017)

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல— 1613

— 1990 ஜூன் 12 —
சுடர் 18 கதிர் 4507

# ஜெயலலிதா எங்கே என்று துடிப்பது ஏனோ?

## தி. மு. க. வை விரட்டியடிக்க விரைவில் வருவார் என்கிறார் காளிமுத்து

"ஜெயலலிதாவைக் காண வில்லை என்று பூரிப்பு அடையாதீர். அவர் வெளியே வருவார். தி மு கவை காணாமல் போகச் செய்வார்" என்று காளிமுத்து எம பி கூறினார்.

சென்னை, அசோக் நகரில் அ தி மு க சார்பில் மலிவு விலை மது, அரிசி விலை உயர்வு ஆகியவற்றைக் கண்டித்து கண்டன பொதுக் கூட்டம நடந்தது.

இதில் கலந்து கொண்டு காளிமுத்து எம பி பேசியதாவது—

நாஙகள் ஒற்றுமைக் குறைவாவாலே அரசாஙகத்தைப் பறிகொடுத்து விட்டோம; உணருகிறோம. அப்படி உணர்ந்துதான் நாஙகள் தெளிவு பெற்று இருக்கிறோம; திருந்தி இருக்கிறோம; ஒன்றுபட்டு இருக்கிறோம. சூதாட்டத்திலே பாண்டவர்கள் நாட்டை இழந்தார்கள். சூதாட்டத்திலே இழந்த நாட்டை கடைசியிலே போராட்டத்துக்கு பிறகுதான் பெற முடிந்தது.

அதைப் போல் புரட்சித் தலைவர் எம ஜி ஆர் முழுமையான ஒரு ஆட்சியை எஙகள் கரத்திலே ஒப்படைத்தார். ஊனமில்லாத ஒரு கட்சியை எஙகள் கரத்திலே ஒப்படைத்தார். நாஙகள் அதை ஊனப்படுத்தி விட்டோம. இன்றைக்கு அதை உணர்ந்திருக்கிறோம.

ஒருவன் ஒரு வைரக் கல்லைத் தூக்கி கடலிலே விட்டெறிந்து விடலாம. மிக மிக எளிது. ஆனால் மறுபடியும அந்த வைரக் கல்லை கடலுக்குள் மூழ்கி தேட வேண்டுமானால், மூச்சுப் பிடித்து கடலுக்குள்ளே செல்லக் கூடிய ஆயிரக்கணக்கான ஆற்றலாளர்கள் தேவை.

அதைப் போல, வைரக் கல்லை எறிவதைப் போல் நாம எறிந்து விட்டோம. சூதாட்டத்திலே நாட்டைப் பறிகொடுப்பதைப் போல பறிகொடுத்து விட்டோம. இதை மீட்டுக் காட்டக் கூடிய வல்லமை அ தி மு க தொண்டனுக்கு உண்டு.

இந்தக் கட்சியை வழிநடத்திச் செல்ல புரட்சித் தலைவி நமக்குக் கிடைத்து இருக்கிறார். ஆட்சியை உருவாக்கிக் காட்டுஙகள் அதற்கு நாஙகள் துணை நிற்கிறோம என்று தமிழ்நாட்டு மக்கள் சக்தியும நமக்குப் பின்னாலே அணிவகுத்து நிற்கிறது. ஆகவே இந்த இரண்டு சக்திகளையும பக்குவமாகப் பயன்படுத்த வேண்டிய தன்மை நமமிடத்திலே இருக்கிறது.

நான் அறுதியிட்டு உறுதியாகத் தெரிவிக்க விருமபுகிறேன். சென்னை மாநகராட்சி ஆனாலும, மதுரை மாநகராட்சியானாலும. கோவை மாநகராட்சியானாலும எப்போது தேர்தல் நடத்தப்பட்டாலும மூன்று இடத்திலும உட்காரப் போகிற மேயர் அ தி மு க மேயர்தான்.

அந்த அளவுக்கு மக்கள் சக்தி நமக்குப் பின்னாலே இருக்கிறது. தலைமைக் கழகத்திலே இருக்கிற நாஙகள் கொஞ்சம ஒழுஙகாகக் காயை நகர்த்த வேண்டுமே தவிர, மக்களுடைய ஆற்றல் பொஙகித் ததுமபி பூரணமாக நிற்கிறது. அதை நாஙகள் புரிந்து கொண்டு இருக்கிறோம.

பல பேருக்கு வியப்பாக இருக்கிறது. புரட்சித் தலைவியைக் காணவில்லை என்கிறார்கள். அவர் இல்லை; ஆனாலும கூட்டம நடக்கிறது; ஆனாலும அவர்கள் கட்சிக் கூட்டஙகள் தமிழ்நாடு முழுவதும நடக்கின்றன. புரட்சித் தலைவியைக் காணவில்லை என்று சொல்லிச் சொல்லி அவர்கள் பூரிப்படைகிறார்கள்.

நான் தெரிவிக்க விருமபுகிறேன். புரட்சித் தலைவியைக் காணவில்லை என்பதா ஆச்சரியம? புரட்சித் தலைவி உஙகள் கண்ணுக்குத் தெரியவில்லை என்பதா ஆச்சரியம?

நாடாளுமன்றத்தில் தி மு க கட்சியே காணாமல் போய் விட்டதே. அதுதான் ஆச்சரியம. உன் கட்சியை அவர் காணா போகச் செய்வதற்குப் பிறகுதான் உன் கண்ணுக்குத் தென்படவில்லை. அவர் மறுபடியும வருவார். சட்ட மன்றத்துக்குள்ளே உன் கட்சியைக் காணாமல் போக வைப்பார்.

— இவ்வாறு காளிமுத்து கூறினார். (ம—10)

## மாணவர்களுக்கு தொழிற் கல்வி

தொழிற் கல்வியில் மாணவர்களை அதிக கவனம செலுத்த வைப்பதற்கு முக்கியமானதொரு நடவடிக்கை எடுக்கவிருக்கிறார் கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி.

தொழிற் கல்வி எல்லாப் பாடசாலைகளிலும் கற்பிக்கப் படும.

மாணவர்கள் 9ஆம ஆண்டுப் பரீட்சையில் தொழிற் கல்வியில் சித்தியடைய வேண்டும்.

சித்தி அடையும மாணவர்களுக்கு தொழிற் கல்வித் தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும.

அந்தச் சான்றிதழைப் பெறுபவர்கள் மட்டுமே ஜீ. சி ஈ சாதாரண தர வகுப்பில் படித்து பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் சித்தி அடைபவர்களே ஜீ சி ஈ உயர் தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியும. அந்தப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெறுபவர்களே பல்கலைக் கழகஙகளில் சேர்ந்து உயர் கல்வி பெறலாம.

ஆகவே உயர் கல்வியில் நாட்டம உள்ள மாணவர்கள் தொழிற் கல்வியைச் சிறாக கற்றுச் சான்றிதழ் பெற வேண்டியது அவசியமாகிறது.

## கம்பஹா மாவட்ட முஸ்லிம்களின் குறைகள் தீர்க்கப்படும் — மாதிவெல

கம்பஹா மாவட்டத்தில் முஸ்லிம பகுதிகளில் அமைந்துள்ள வீதிகளைப் புனரமைப்பதற்கும வீடமைப்பு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும சகல முயற்சிகளையும நான் மேற் கொள்வேன்—

மேல் மாகாண போக்குவரத்து வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் திரு லோரன்ஸ் மாதிவெல இவ்வாறு உறுதி அளித்தார்—

யாக முஸ்லிம கிராமஙகளுக்கு விஜயம செய்து குறைகளை அறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதாக உறுதியளித்தார்—

கள்—எளிய திகாரிய அக்புர்டவுன் மக்கொனை கஹட்டேவிட்ட மள்வானை ஆகிய பகுதிகளுக்கு விரைவில் விஜயம செய்வதாக அமைச்சர் கூறினார்—

இத் தூதுக் குழுவில் சஙகத்தின் உபதலைவர்கள் டாக்டர்



## செய்தித் திரட்டு

### விதை வெங்காய விலை ஏற்றம்

நாத்தாண்டி ஜூன் 10

கல்பிட்டி, மதுரஙகுளி நகர்களை அடுத்துள்ள பல கிராமஙகளில் சின்ன வெஙகாயச் செய்கையிலீடுபட்டு வந்த விவசாயிகள் விதை வெஙகாய விலை ஏற்றத்தால் பாரிய கஷ்ட நிலைக்குள்ளாகியுள்ளார்கள்.

முன்னர் ஓர் அந்தர் விதை வெஙகாயம சுமார் ஆயிரம ரூபா வரையே விற்பனையானது, ஆனால் தற்பொழுது விலை 2500 ரூபா வரை அதிகரித்துள்ளது.

(ரி—225).

### பாரமபரியம சிறக்க வேண்டும்

கொழுமபு ஜூன் 11

சப்ரகமுவ பிரதேசத்தில் இன்று எழுந்துள்ள எழுச்சி இன்னும மேலோஙக வேண்டும. தேஙகிய எமது சமய உணர்வும, கலை உணர்வும இதனால சிறப்புறும என்ற நமபிக்கை எனக்குண்டு.

பலாஙகொடை, மத்திய மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் சப்ரகமுவ, "தமிழ் கலை, கலாசார ஒன்றியம" ஒழுஙகு செய்திருந்த கலை விழாவில பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அமைச்சர் தேவராஜ் இவ்வாறு கூறினார். கூறினார்.

செந்தமிழும, செந்தமிழும சம அந்தஸ்து பெற்றுள்ள இந்த சமயத்தில் நாம தமிழ் வளர்ச்சியும கலை வளர்ச்சியிலும பின்னிற்க முடியாது. எமது மொழியினதும கலையினதும பாரமபரியத்தை உறுதிப்படுத்துவதிலும வளர்ப்பதிலும நாம அதிக கவனம செலுத்த வேண்டும என்று அமைச்சர் தொடர்ந்து உரையாற்றினார்.

(ரி—ங).

### கிளிநொச்சியில் விவசாய பீடம்

### சம்பள உயர்வு அதிபர்களுக்கு இல்லை

வறக்காப்பொளை ஜூன் 10

கடந்த வரவு செலவுத் திட்டத்தின் போது 250 ரூபா விசேட அலவன்ஸாக வழஙகப்பட்ட சமபள உயர்வு பட்டதாரி ஆசிரியர்களுக்கும அதிபர்களுக்கும வழஙகப்படாதது குறித்து சமபந்தப்பட்டவர்கள் பெரிதும கவலையடைந்துள்ளனர்—

ரூபா இரண்டாயிரத்துக்குக் குறைந்த அடிப்படை சமபளம பெறும ஆசிரியர்களுக்கும ஏனைய அரச ஊழியர்களுக்கும

ஆகவே உயர் கல்வியில் நாட்டம் உள்ள மாணவர்கள் தொழிற் கல்வியைச் சிராகக் கற்றுச் சான்றிதழ் பெற வேண்டியது அவசியமாகிறது.

ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெறத் தவறுவோர் இப்போது ஏதும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

அமைச்சர் அத்துலத் முதலியின் புதிய திட்டப்படி இந்த மாணவர்கள் எல்லோரும தொழிற்கல்வி பயின்று தேர்ச்சிச் சான்றிதழையும பெற்றிருப்பார்கள்.

அதனால் இவர்கள் எல்லோரும தொழில் நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து படித்து தொழில்நுட்பத் துறையில் பட்டம பெறலாம.

ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பாத 9 ஆம வகுப்பு மாணவர்களும தொழில் நுட்பக் கல்விப் பயிற்சிச் சான்றிதழ் வைத்திருந்தால் அவர்களும தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து படித்து தொழில்நுட்பத் துறையில் பட்டம பெற வசதி செய்யப் படும.

இததான் அமைச்சர் அத்துலத் முதலியின் திட்டம.

இதன்படி அநேகமாக வருங்கால மாணவர்கள் எல்லோரும சான்றிதழ் பெற்றாலும சரி, பெறாவிட்டாலும சரி தொழிற கல்வி பயின்றவர்களாகவே இருப்பார்கள். அதனால் அவர்கள் வேலை வாய்ப்புப் பெறுவதும விரும்பினால் சுயதொழில்களில் ஈடுபடுவதும சுலபமாகும.

இப்போது சில பாடசாலைகளில் தொழிற் கல்வி கற்பிக்கப்பட்டாலும அதில் போதிய கவனம செலுத்தப்படுவதில்லை. மாணவர்களும விரும்பிப் படிப்பதாக இல்லை. இந்த நிலை இனிமாறி விடும.

மேல் மாகாண போக்குவரத்து வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் திரு லோரன்ஸ் மாதிவெல இவ்வாறு உறுதி அளித்தார்.

கமபஹா மாவட்ட முஸ்லிம சங்கத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்து மாவட்ட முஸ்லிமகளின் பிரச்சினைகள் குறித்து அண்மையில் பேச்சுவார்த்தைகள் நடத்தியது.

ஜனாப் எம ஏ நூமான் தலைமையில் சென்ற இக் குழுவினரிடம அமைச்சர் நேரடி ...ளுக்கு விரைவில் விஜயம செய்வதாக அமைச்சர் கூறினார்.

இத் தூதுக் குழுவில் சங்கத்தின் உபதலைவர்கள் டாக்டர் எம ரீ அய்துல்லா செயலாளர் எம ஐ எம சக்கரியா ஜே பி வத்தளை - மாபோளை நகர சபை உறுப்பினர் எம ரீ ரிஸ்வி பாவா சட்டத்தரணி சக்கீன் காதர் அல்ஹாஜ் ஜிப்ரி ஹனிபா புவார்தீன் மரிக்கார் மஸ்தார் ஹமீத் பக்கீர் அலி ஜே பி ஆகியோர் கலந்து கொண்டனர்.

[ரி—403]

# பிரதேச சபை மூலம் இளைஞருக்குநிர்வாகத்தில்: பங்கு — இம்தியாஸ்

கொழும்பு, ஜூன் 11

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் இளைஞர்களுக்கு முக்கிய இடம கொடுக்கப்படும. பிரதேச சபைகள் மூலம இளைஞர்கள் நிர்வாகத் துறையில் பங்கு பற்றக் கூடிய வாய்ப்பு ஏற்படும.

வீடமைப்பு ராஜாங்க அமைச்சரும அகில இலங்கை ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் அணியின் பொதுச் செயலாளருமான அல்ஹாஜ் இமதியாஸ் பாக்கீர் மாக்கார் இவ்வாறு கூறினார்.

பேருவளை ஐக்கிய தேசியக் கட்சி மத்திய குழு இளைஞர் மாதர் பிரிவுகளின் கிளைத் தலைவர்கள் செயலாளர்கள் அமைப்பாளர்கள் கலந்து கொண்ட இவ் விசேட கூட்டத்தில் உரையாற்றும போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பேருவளை கூட்டுறவு இல்லக் காரியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அமைச்சர் இமதியாஸ் பாக்கீர் மாக்கார் மேலும பேசுமபோது கூறியதாவது—

அமரர் திரு டி எஸ் சேனநாயக்காவினால் ஸ்தாபிக்கப்பட்ட இக்கட்சி நாட்டின் முன்னேற்றத்துக்கு அன்று முதல் இன்று வரை உழைத்து வருகிறது என்று சொன்னார்.

[ரி—007]

## மத்திய மா. சபை கூட்டம் இன்று

கண்டி ஜூன் 10

மத்திய மாகாண சபையின் இரண்டாவது தொடர் ஒத்தி வைப்புக் கூட்டம இன்று 12ஆம நாளை 13 ஆம திகதிகளில் கண்டி குயின்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கூட்டம பிறபகல் 10,00 மணிக்கு ஆரமபமாகும. ஆளுநரின் கொள்கைப் பிரகடனம தொடர்பான உரை மீது தொடர்ந்து விவாதம் நடைபெறும.

(ல—017)



# மரக்கறி அறுவடை

சர்வோதய இயக்க கல்முனை மாவட்ட மத்திய நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையின் அறுவடை வைபவம அண்மையில் நடைபெற்றது.

வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சர்வோதய இயக்க கல்முனை மாவட்ட இணைப்பாளர் திரு கே கனகரத்தினத்திடம களஞ்சியப் பொறுப்பாளரும, வீட்டுத்தோட்ட மேற்பார்வையாளருமான திரு எம செல்லத்துரை அறுவடை செய்யப்பட்ட மரக்கறி வகைகளை வழங்குவதைப் படத்தில் காண்க.

சர்வோதய உதவி மாவட்ட இணைப்பாளர் ஜனாப் எம ஏ எம் மன்சூரும படத்தில் காணப்படுகிறார்.

[படம ஏ எல் எம சலீம]

(ரி-217)

# யாழ். மாவட்டத்தில் 5 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

யாழ்ப்பாணம ஜூன் 11

யாழ் தேர்தல் மாவட்டத்தில் 5 லட்சத்து 96 ஆயிரத்து 382 பேர் வாக்களிக்கும தகுதி பெற்றுள்ளனர்.

1989 ஆம ஆண்டு திருத்தி அமைக்கப்பட்ட வாக்காளர் இடாப்பின்படி இவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்யப் பட்டிருக்கின்றனர்.

யாழ் மாவட்டம, கிளிநொச்சி மாவட்டம ஆகிய இரு மாவட்டங்களையும உள்ளடக்கிய யாழ் தேர்தல் மாவட்டத்தில் பிரதேச வாரியாக வாக்களிக்கும தகுதி பெற்றிருப்போரின் எண்ணிக்கை வருமாறு—

| | |
|---|---|
| கிளிநொச்சி | 55,996 |
| யாழ்ப்பாணம | 50,027 |
| நல்லூர் | 62,381 |
| பருத்தித்துறை | 40,337 |
| சாவகச்சேரி | 51,720 |
| உடுப்பிட்டி | 52,152 |
| கோப்பாய் | 56,500 |
| மானிப்பாய் | 58,383 |
| காங்கேசன்துறை | 60,421 |
| வட்டுக்கோட்டை | 58,951 |
| ஊர்காவற்றுறை | 49,508 |

இதன் அடிப்படையில் நல்லூர் வாக்கெடுப்புப் பிரதேசத்தில் ஆகக் கூடுதலான வாக்காளர்களும, பருத்தித்துறை வாக்கெடுப்பு பிரதேசத்தில் ஆகக் குறைவான வாக்காளர்களும பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

(எ-ந-142)

## கண்ணகை அம்பாள் பொங்கல் விழா

ஏறாவூர் ஜூன் 10

ஏறாவூர்ப் பிரிவின் வந்தாறுமூலையில் கோயில் கொண்டிருக்கும கண்ணகை அம்பாளின் வருடாந்தப் பொங்கல் விழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

[ரி—073]

...படாதது குறித்து சமபந்தப்பட்டவர்கள் பெரிதும கவலையடைந்துள்ளனர்.

ரூபா இரண்டாயிரத்துக்குக் குறைந்த அடிப்படை சமபளம பெறும ஆசிரியர்களுக்கும ஏனைய அரச ஊழியர்களுக்கும கிடைக்கும இச்சமபள உயர்வு தமக்கு மட்டும வழங்கப்படாதது குறித்துக் கவலை தெரிவிக்கும அதிபர்களும பட்டதாரிகளும் இது தமக்கு இழைக்கப் பட்ட அநீதியாகும என்றும கூறுகின்றனர்.

தற்போது 2400 ரூபா அடிப்படைச் சமபளம பெறும பயிற்றப்பட்ட ஆசிரியருக்கும இந்த 200 ரூபா சமபள உயர்வு கிடைக்கிறது.

ஆனால் 2225 ரூபா பெறும பட்டதாரி ஆசிரியருக்கு இச் சமபள உயர்வில்லை. இதே போன்ற ரூபா 2150 இல் அடிப் படைச் சமபளம பெறும பழைய 5ஆம தர அதிபர்களுக்கும இச்சமபள உயர்வு கிட்டாதது கவலைக்குரியதே!

அத்துடன் தற்போதைய 1 2 3 ஆம தர அதிபர்கள் சேவையில் உள்ளவர்களுக்கும இச்சமபள உயர்வு கிடையாது.

இதனால் அதிபர்களும பட்டதாரி ஆசிரியர்களும விரக்தியுடனும மனவருத்தத்துடனுமே தற்போது பாடசாலைகளில் சேவையாற்றி வருகின்றனர்.

[ரி—333]

## சடலத்தின் பாகங்களை அனுப்பகோரிக்கை

கொழும்பு, ஜூன் 10

புதை குழியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட இளம யுவதியின் சடலத்தின் பாகஙகள் இன்னும இருப்பின் அவற்றையும உடனடியாக கொழும்புக்கு அனுப்பி வைக்குமாறு கல்னேவ பொலீஸாருக்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது.

கடந்த இரு வாரஙகளுக்கு முன்னர் கல்னேவ பகுதியில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட ஷமிலா துசாரி வயது 17) என்ற இளம யுவதியின் சடலமே புதைகுழியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டு, மேலதிக பிரேத பரிசோதனைக்காக கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

(ந-வ)

...அமைச்சர் தொடர்ந்து உரையாற்றினார்.

(ரி-ந).

## கிளிநொச்சியில் விவசாய பீடம்

பூநகுடுதீவு ஜூன் 10

யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம எதிர்வரும செப்டம்பர் மாதம மூன்றாம திகதி முதல் கிளிநொச்சியில் இயங்கும.

இதே வேளையில் யாழ் பரமேஸ்வரா நமபிக்கை நிதியம யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு ஆய்வுகளை மேற்கொள்ள 48 ஏக்கர் வயற் காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. பரந்தன் மூன்றாம வாய்க்கால் பகுதியில் இக்காணி அமைந்துள்ளது.

(ரி-240).

## மட்டக்களப்பில் குளங்கள் திருத்தப்படும்

ஏறாவூர் ஜூன் 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதான விவசாயக் குளஙகளைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளில் நீர்ப்பாசனத் திணைக்களம இறஙகியுள்ளது.

புனாணை அணைக்கட்டு, உன்னிச்சை அணைக்கட்டு, அவற்றின் இடது வலதுகரை வாய்க்கால்கள, உறுகாமம குளம, வாகனேரிக்குளம, ஆகியவற்றைத் திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மட்டக்களப்பு பணிப்பாளர் திரு எஸ் எஸ் மனோகரதாஸ் எடுத்துள்ளார்.

(ரி-073)

# வங். நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 30 ஆசனங்கள்

## சட்டம் மறுசீரமைக்கப்பட்டதாக அமைச்சர் அறிவிப்பு

டாக்கா, ஜூன் 11

வங்காளதேச நாடாளுமன்றத்தில் 30 ஆசனங்கள் பெண்களுக்கென விசேடமாக ஒதுக்கப்படும். இதற்கான புதிய சட்டமொன்று பற்றி ஞாயிறன்று அறிவிக்கப்பட்டது.

வங்காளதேச சட்டத்துறை அமைச்சர் ஹபிபுல் இஸ்லாம் புஹியா நாடாளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒழிக்கப்பட்ட சட்டம் இப்போது திருத்தப்பட்டு விட்டதாக அவர் கூறினார்.

இச் சட்டச் சீர்திருத்தத்தின்படி நாடாளுமன்றத்தில் பெண்களுக்கென 30 ஆசனங்கள் ஒதுக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகும் 300 உறுப்பினர்களில் 30 பேர் பெண்களாக இருக்கும் வாய்ப்பு இச்சட்ட சீர்திருத்தத்தினால் உருவாகியிருக்கிறது.

வங்காளதேசத்தில் 15 ஆண்டுகளாக அதிக அளவில் பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் வரம் பெற்றிருந்தனர். இந்தச் சட்டம் ஒழிக்கப்பட்டதால் கவலையுற்ற பெண்களுக்கு இந்த அறிவித்தல் நிச்சயம் மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

அத்தோடு மேலும் பத்து வருடங்களுக்கு புதிய சட்டம் அமுலில் இருக்கும்.

இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் கூறினார்.

[எ]

## 28 ஆண்டுகளுக்கு முன் மண்டேலா கைதாவதற்கு அமெ. உதவியதாக தகவல்

அட்லாண்டா, ஜூன் 11

சுமார் 28 ஆண்டுகளுக்கு முன் காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா கைதாவதற்கு அமெரிக்க மத்திய உளவுப் பிரிவு வழங்கிய இரகசியத் தகவலொன்றே காரணமாகி உள்ளது.

இதுபற்றி அட்லாண்டா சஞ்சிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தென் ஆபிரிக்க அதிகாரிகள் மண்டேலாவைக் கைது செய்ய அமெரிக்க உளவுப் பிரிவு வழங்கிய தகவல் உதவியுள்ளது.

1962 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 ஆம் திகதியன்று அங்கு வைத்து மண்டேலாவைக் கைது செய்ய முடியும் என்ற தகவல் அமெரிக்க உளவுப் பிரிவினரால் தென் ஆபிரிக்க அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

மண்டேலா கைது செய்யப்பட்ட வேளையில் தடை செய்யப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவராக இருந்தார். அவர் எப்படி உடை அணிந்திருப்பார் என்ற விபரமும் உளவுப் பிரிவினரால் வெளியிடப்பட்டது.

முன்னாள் அமெரிக்க உளவுப் பிரிவு ஊழியர் ஒருவருக்கு உளவுப் பிரிவு பிரதிநிதி ஒருவர் மண்டேலா கைதாகவிருப்பது பற்றி வெளியிட்டுள்ளார்.

அங்கு பிரதிநிதி 1986 ஆம் ஆண்டு இறந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபரங்களை அட்லாண்டா சஞ்சிகை வெளியிட்டிருக்கிறது.

(எ)

## சிந்து மாகாணத்தில்

# உலகச் செய்திகள்

கிளர்ச்சி அச்சுறுத்தலால்

## லைபீரியாவில் அமெரிக்கர் துரிதமாக வெளியேற்றம்

மொன்றோவியா, ஜூன் 11

லைபீரியாவில் இருக்கும் அமெரிக்கர்கள் இப்போது துரிதமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி சாமுவல்டோவின் ஆட்சியைக் கவிழ்ப்பதில் கிளர்ச்சியாளர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

கடந்த ஆறு மாதங்களாக இடம்பெற்று வரும் மோதல்கள் உக்கிரமடைந்துள்ளன. இதனால் கடந்த வாரம் முதல் லைபீரியாவிலிருக்கும் அமெரிக்கர்கள் நாடு திரும்ப அமெரிக்கா உதவி வருகிறது. இந்தப் பணி இப்போது துரிதமாக நடைபெறுகிறது.

மொன்றோவியாவில் இருந்து 120 அமெரிக்கர்கள் ஞாயிறன்று காலை அப்புறப்படுத்தப்பட்டனர். அபிட்ஜான் என்னும் இடத்தில் இறக்கப்பட்ட இவர்கள் அங்கிருந்து அமெரிக்காவுக்கு மற்றொரு விமானத்தில் பயணமாவார்கள்.

ராஜதந்திரிகள் பலர் இந்த 120 பேரில் அடங்கியுள்ளனர்.

இதேவேளையில் லைபீரியாவில் வாழும் கயனா நாட்டவர்களும் துரிதமாக அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றனர். (எ)

### 15 பேர் பலி

டாக்கா, ஜூன் 11

வங்காளதேசம் வடக்கில் மாணிக்கம் நகரில் நடந்த பஸ் விபத்தொன்றில் 15 பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர்.

திருமண வைபவமொன்றிற்குச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே விபத்துச் சம்பவித்தது. (எ)

## தென் கொரியாவில் ஆட்சிக்கு எதிராக பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்

சோல் ஜூன் 11

தென் கொரிய ஜனாதிபதி ரோ-டே-வூ வின் ஆட்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரரை அடக்க முயன்ற கலகம் அடக்கும் பொலீஸார் மீது பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டன. கற்களாலும் எறிந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் குழப்பம் விளைவித்தனர்.

பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறி ஊர்வலமாகச் செல்ல முயன்ற மாணவர்கள் பொலீஸாரால் தாக்கப்பட்டனர். சோல், பூசன் தேகு குவாங்ஜு உட்பட மற்றும் பல நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

குழப்பம் விளைவித்தவர்களில் சுமார் 500 பேர் கைதாகியுள்ளனர்.

ரோ-டே-வூவின் ஆட்சி ஒழிய வேண்டும். அவரை வெளியேற்றுவோம். இவ்வாறு குரல் எழுப்பப்பட்டது.

[எ]

## லைபீரியாவில் அமைதி நிலை பெற பாப்பரசர் பிரார்த்தனை

வத்திக்கான்நகர் ஜூன் 11

லைபீரியாவில் சமாதானம் நிலைபெற வேண்டுமென பாப்பரசர் பிரார்த்தனை நடத்தினார்.

வத்திக்காவில் சென்பீட்டர் தேவாலாய சதுக்கத்தில் குழுமியிருந்த மக்களிடம் லைபீரியாவின் அமைதிக்காக பிரார்த்திக்குமாறு பாப்பரசர் கேட்டுக் கொண்டார்.


கடந்த சில வாரங்களாக இடம் பெற்று வரும் நெருக்கடியால் லைபீரிய மக்கள் பலர் இறந்துள்ளனர்.

கிளர்ச்சியாளர்கள் தமது ஆயுதங்களைக் கைவிட வேண்டும். இவ்வாறு பாப்பரசர் கேட்டுக் கொண்டார்.

லைபீரியாவில் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றுவரும் கிளர்ச்சியாளர்கள் அயல்நாடான சியராலியொனில் பேச்சுவார்த்தைகள் நடத்த வருமாறு அரசாங்கத்தை அழைத்துள்ளனர்.

இதே வேளையில் சுமார் 10,000 லைபீரியர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் சியராலியொனில் புகலிடம் அளிக்க முன் வந்துள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக இங்கு இடம்பெற்றுவரும் சிவில்



## சிந்து மாகாணத்தில் 4000 பேர் கைது

கராச்சி ஜூன் 11

சிந்து மாகாணத்தில் குழப்பம் விளைவித்த காரணத்துக்காக ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்- பாகிஸ்தான் அதிகாரிகள் இவர்களைக் கைது செய்ததாக அறிவிக்கப்படுகிறது-

கடந்த மே மாதம் 15ஆம திகதி முதல் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்- இதுவரை 4,000 பேர் கைதாகியுள்ளனர்- மொஹாஜிர் தேசிய இயக்கப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்-

கடந்த இருவார காலத்தில் 260 பேர் குழப்பங்களின் விளைவாக உயிரிழந்துள்ளனர்-

கராச்சியிலும், ஹைதராபாத்திலும் இராணுவ கண்காணிப்பின் கீழான ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது- இதனால் அப்பகுதிகளில் ஓரளவு அமைதி நிலவுகிறது-

கைது செய்யப்பட்டிருக்கும் 4,000 பேரில் 95 சதவீதமானோர் மொஹாஜிர் இனத்தவர்களாவர்- இவர்கள் இந்தியாவிலிருந்து வந்து இங்கு குடியேறியவர்களாவர்.

ஹைதராபாத் கராச்சி சுக்கூர் நகரங்களிலிருந்தும பலர் கைதாகியுள்ளனர்-

இந்த நகரங்களிலெல்லாம மொஹாஜிர்களே அதிகமாக வாழ்கின்றனர்- [எ]

## கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை

மணிலா, ஜூன் 11

பிலிப்பைன்ஸ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்- தீவிரவாதிகள் இவர் சென்று கொண்டிருந்த கார் மீது துப்பாக்கிப் பிரயோகம செய்தனர்-

கடந்த வாரமும பொலீஸ் கேர்ணல் ஒருவர் மணிலாவில் சுட்டுக் கொல்லப்பட்டார்- (எ)



### புதுடில்லியில் பட்டினியால் வாடும் ஏழைகள்

புதுடில்லியில் பட்டினிக் கொடுமையால் அல்லலுறும மக்களின் எண்ணிக்கை சொல்லுந்தரமன்று- பழைய நகரில் பெரிய பள்ளிவாசலுக்குச் செல்லும வீதியில் ஒரு படிக்கட்டின் மீது ஆங்காங்கே அமர்ந்து பசி தீர்க்க உணவு கிடைக்குமா எனக் காத்திருக்கும ஏழைக் குடும்பங்களை அன்றாடம காணலாம-

அவ்வாறான சில ஏழைக் குடும்பங்களையே படத்தில் காண்கிறீர்கள்- [எ—*ச]

கடந்த ஆறு மாதங்களாக இங்கு இடமபெற்றுவரும சிவில் யுத்தத்துக்கு அஞ்சி வெளியேறியவர்களை சியாரொலியோனில் குடியமர்த்த செஞ்சிலுவைச் சங்கம நடவடிக்கை எடுத்திருக்கிறது- (எ)

## டியூனிஷியாவில் தேர்தல் பகிஷ்கரிப்பு

டியூனிஷியா, ஜூன் 11

டியூனிஷியாவில் ஞாயிறன்று நடந்த தேர்தலை எதிர்க்கட்சியினர் பகிஷ்கரித்தனர்-

இங்கு இஸ்லாமிய இயக்கத்துக்கு கடந்த ஏப்ரலில் நடந்த பொதுத் தேர்தலில் 13 சதவீத வாக்குகள் கிடைத்தன- அயினும இந்த இயக்கத்துக்கு பாராளுமன்றத்தில் ... அங்கீகாரம் மேலும வழங்கப்படவில்லை.

இதனையடுத்தே எதிர்க்கட்சியினர் உள்ளூராட்சித் தேர்தலை பகிஷ்கரித்தனர்- (எ)

## கென்யா ஒத்துழைப்பு வழங்க முடிவு

நைரோபி, ஜூன் 11

வட எதியோப்பிய சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர கென்யா பூரண ஒத்துழைப்பு வழங்கும்-

எதியோப்பிய ஜனாதிபதி மெங்கிஸ்டு ஹெயில் மாரியத்துக்கு இதற்கான உறுதியை வழங்கினார் கென்ய ஜனாதிபதி டானியல் அரப்மோய்-

பிராந்தியத்தில் நிரந்தர அமைதியை ஏற்படுத்த இரு தலைவர்களும ஒருமித்து செயல் படுவார்கள்- (எ)

# இந்திய—பாகிஸ்தான் யுத்த அச்சுறுத்தல் ஓயவில்லை

### —பாதுகாப்பு அமைச்சர்

இஸ்லாமாபாத் ஜூன் 11

இந்தியாவுக்கும பாகிஸ்தானுக்கும இடையிலான யுத்த அச்சுறுத்தல் இன்னும ஓயவில்லை- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் குலாம சர்வார் சீமா!.

பேஷாவார் தினசரிக்குப் பேட்டியளித்த போதே அவர் இதுபற்றிக் கூறினார்-

பாகிஸ்தான் எல்லையில் இந்திய படைகள் நிலை கொண்டிருக்கும வரை யுத்த அச்சுறுத்தலும அவ்வாறே நிலைத்திருக்குமென அவர் தெரிவித்தார்-

இந்திய படைகளை வாபஸ் பெறுவது செயலில் காட்டப்பட வேண்டும- பதற்றத்தைத் தணிக்க விளைவை தவிர்க்க முற்று முழுதான நடவடிக்கைகள் அவசியம-

இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார்-

பாகிஸ்தானும இந்தியாவும இவ்வாண்டின் இராணுவச் செலவினை வரவு செலவுத் திட்டத்தில் அதிகரித்துள்ளன-

இராணுவ செலவுகளை அதிகரிப்பதை விடுத்த இரு நாடுகளும பரஸ்பர புரிந்துணர்வுடன் செயல்பட வேண்டும-

இவ்வாறு அக்மல் ஹுசேன் என்ற பாகிஸ்தான் பிரமுகர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்- [எ]

## 112 வயதில் இறந்த முதியவர்

லண்டன், ஜூன் 11

உலகிலேயே அதிக வயது முதிர்ந்தவரான வெல்ஸ் மன் ஜோன் இவன்ஸ் தமது 112 ஆவது வயதில் காலமானார்-

கடந்த சில தினங்களாக இவர் நோய்வாய்ப்பட்டிருந்தார்-

மகாராணி விக்டோரியா இறப்பதற்கு 14 ஆண்டுகளுக்கு முன் 1877 இல் இவர் பிறந்தார்-

இங்கிலாந்தில் சவுத்வேல்ஸ் சுரங்கமொன்றில் 13 வயதிலேயே தொழிலாளியாக இவர் சேர்ந்தார்-

108 வயதில் இருதய மாற்று சத்திர சிகிச்சை ஒன்று நடத்தப்பட்டது- வயது முதிர்ந்த நிலையில் இவருக்குச் செய்யப்பட்ட இந்தச் சத்திர சிகிச்சை வெற்றி அளித்தது- இதனால் மருத்துவ உலகிலும ஜோன் இவன்ஸ் வரலாறு படைத்திருக்கிறார்- (எ)

# பதில் அதிபர் பதவி: நிரந்தரமாகும்

## கல்வி சேவை ஆணைக்குழு முடிவு

கண்டி, ஜூன் 10

அரசாங்க பாடசாலைகளில் பதில் அதிபர்களாகக் கடமை புரியும் நூற்றுக் கணக்கானோரின் பதவிகள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளன.

இதற்கான முடிவை கல்விச் சேவைகள் ஆணைக்குழு எடுத்திருக்கின்றது.

நாடு எங்கிலும் உள்ள பாடசாலைகளில் பணி புரியும் பதில் அதிபர்கள் அடிக்கடி கல்வி அமைச்சரை கேட்டுக் கொண்டதன் பேரிலேயே இந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ் அடிப்படையில் அதிபர்கள் பதவிக்காக இடம்பெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் கணிசமானோருக்கும் அதிபர் பதவிகள் வழங்கப்படும்.

அத்துடன் தற்காலிக, மற்றும் பதில் அதிபர் சேவையில் இருந்தோருக்கும் இந்த பதவி உயர்வு இம் மாதம் வழங்கப்படும் என ஆணைக்குழு அறிவிக்கின்றது.

கடந்த வாரம் பளை ஸாஹிரா கல்லூரியில் அண்மையில் பதில் அதிபர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் வைத்து பதில் அதிபர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியிருந்தார்.

1982 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாடசாலை அதிபர்களுக்கு பதவி உயர்வுகள் பரந்த ரீதியாக வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக இவ்வாறு பதில் அதிபராகக் கடமை புரியும் பலருக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என மகஜர்கள் மூலம் ஜனாதிபதிக்கும், அமைச்சருக்கும் சுட்டிக் காட்டி வந்தனர்.

இவ் அடிப்படையின் கீழ் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை தொடர்ந்து மூன்றாண்டுகள் பதில் அதிபர்களாக கடமை புரிந்தவர்கள் தகுதிக்கு ஏற்ப அதிபர்களாகப் பதவி உயர்த்தப்பட்டு உள்ளனர்.

இதன் பொருட்டு கல்விச் சேவை ஆணைக்குழு பல தடவைகள் நேர்முகப் பரீட்சைகளையும் நடத்தி உள்ளது.

(இ—017)

## யாழ். மாவட்டத்தில் மூலவளங்கள் பற்றி ஆய்வு

கோப்பாய், ஜூன் 10

யாழ் மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் பிரதேச மூலவளங்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும், தற்பொழுது நடைமுறையில் உள்ள தொழில்களை விருத்தி செய்வதற்கும் வசதியாக மூலவள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆய்வு ரீதியாக மூலவளம் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வின் முடிவுகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக நூல் வடிவில் வெளியிடப்படவுள்ளது.

(இ—142)

## ஒரு தாய் மக்கள் என்ற எண்ணம் நம்மில் வளர வேண்டும்

### — அஸ்வர்

கொழும்பு, ஜூன் 10

நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக ஜனாதிபதி மேற்கொண்டுள்ள நல்ல முயற்சிகள் வெற்றியளிக்க வேண்டுமாயின் ஒரு தாய் மக்கள் என்ற எண்ணம் நம்மில் மேலோங்க வேண்டும்.

முஸ்லிம் சமய, கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் அஸ்வர் அண்மையில் குருநாகலைக்கு விஜயம் செய்தார். அவருக்கு இங்கு பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது. இவ் வரவேற்பு வைபவத்தில் அஸ்வர் மேலும் கூறியதாவது—

இன்றைய கால கட்டத்தில் மக்களிடையே புரிந்துணர்வு வேண்டும்.

இந்தப் புரிந்துணர்வு ஏற்பட்டால் தான் நாட்டின் தலைவராக உள்ள ஜனாதிபதி எந்தச் செயல் திட்டத்தையும் நிறைவேற்றக் கூடியதாக இருக்கும் என்றார்.

திகவெல்கல ஜும்ஆப் பள்ளிவாசல் முன்றலில் பேஷ் இமாம் ஏ நஜீமுத்தீன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

ஜனாப் எம் எச் எம் பாறூக் ஊர் மக்கள் சார்பாக இதனை ஒழுங்கு செய்திருந்தார்.


அமைச்சர் ஹாஜி அஸ்வர் பள்ளிவாசல்களின் பிணக்குகள் பற்றியும் இங்கு எடுத்துரைத்தார்.

விசேட பேச்சாளராகக் கலந்து கொண்ட வடக்கு, கிழக்கு மாகாண சபை அங்கத்தவர் அல்ஹாஜ் எஸ் இஸட் எம் மசூர் மௌலானா உரையாற்றுகையில்,

இலங்கை முஸ்லிம்களுக்குச் சேவை செய்ய வந்துள்ள ஒரு தன்னலமற்ற சேவையாளரே அமைச்சர் அஸ்வர். எந்தத் தவறுக்கும் தன்னை இதுவரையில் ஆக்கிக் கொள்ளாத ஓர் உன்னதமான பண்பாளர் என்றார்.

புடைவைக் கைத் தொழில் ராஜாங்க அமைச்சர் திரு அரிய குணதிலக்க, மாகாண சபை அங்கத்தவர் திரு ஆரா கொடபிட்டிய ஆகியோரும் இங்கு உரையாற்றினர். ஏ எல் எம் முஸ்தபா நளீமி நன்றி உரை ஆற்றினார்.

(இ—007)



## கல்முனையில் பஸ்ஸுக்கு தவம்

கல்முனைப் பகுதியில் பஸ் சேவைகள் படுமோசமான நிலையிலிருப்பதால் பிரயாணிகள் பெரும் அவஸ்தைக்குள்ளாகி வருகின்றனர்.

பஸ்கள் எதுவும் நிறுத்தப்படாத நிலையில் கல்முனை பஸ் நிலையம் வெறிச் சோடிக் கிடப்பதையும், பிரயாணிகள் பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காக தவம் கிடப்பதையும் இப்பொழுது அடிக்கடி அவதானிக்க முடிகின்றது.

அத்தகைய ஒரு நிலையில் கல்முனை பஸ் நிலையம் வெறிச் சோடியிருப்பதையும், பிரயாணிகள் பஸ் நிலையக் கட்டடத்தில் நிரம்பி வழிந்திருப்பதையும் படத்தில் காண்க.

(இ—217)

[படம்— ஏ எல் எம் சலீம்]

## மலையகத்தில் சுகாதார கலை: கண்காட்சி போட்டி

சீடா நிறுவனம் மலையகத்தில் சுகாதாரம் போஷாக்கு தொடர்பாக கலை கண்காட்சி போட்டியொன்றை நடத்த உள்ளது.

இப்போட்டி நிகழ்ச்சிகள் புளியாவத்தை, நோர்வூட், பொகவந்தலாவ, மஸ்கெலியா, ஹட்டன், தலவாக்கொலை, கினிகத்தேனை, சுமனா, அரஸ்கல, ஸ்ரீபாத, லக்சபான ஆகிய கொத்தணியிலுள்ள பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்படும்.

போட்டிக்கு அனுப்பப்படும் ஆக்கங்கள் யாவும் புதியனவாகவும், முன்பு மேடையேற்றப்படாதனவாகவும், சுகாதாரப் போஷாக்கு ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவும் அமைதல் வேண்டும்,

அத்துடன் ஒவ்வொரு பாடசாலையும் குறைந்தது நான்கு நிகழ்ச்சிகளையாவது தயாரித்தல் அவசியம்.

போட்டிகள் யாவும் முதலாம் பிரிவு இரண்டாம் பிரிவு, மூன்றாம் பிரிவு என்னும் அடிப்படையில் ஆகிய நிகழ்ச்சிகளும். மேலதிகப் போட்டிகளாக சித்திரம், சுவரொட்டிச் சித்திரம், நாடகப் போட்டிகளும் இடம் பெறும்.

போட்டிகள் யாவும் பாடசாலை மட்டத்திலும், கொத்தணி மட்டத்திலும் மேற்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

(இ—40)

## தொழிலாளரது அறிவை மேம்படுத்துவது அவசியம்

### மத்திய மா. சபை உறுப்பினர்

மஸ்கெலியா, ஜூன் 10

"தோட்டந் தோறும் நூலகம் திறக்கப்பட்டு, தொழிலாளரது அறிவு மேம்படுத்தப்படுவது அவசியமும், இன்றியமையாததுமாகும்"

தொழிலாளர் தேசிய சங்க...

இவர் அண்மையில் அட்டன் களனிவத்த தோட்டத்தில் நூலகமொன்றை திறந்து வைத்தார். விழாவிற்கு இளைஞர் மன்றத் தலைவர் திரு கே சங்கர் தலைமை வகித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து...

## பெண்களுக்காக பிராந்திய கல்லூரிகள் அமைக்க வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 11

பெண்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு பெண்களுக்காக பிராந்தியக் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும்.

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு, கல்வி, உயர் கல்வி அமைச்சர் ... மாகாணங்களிலும் பிராந்தியக் கல்லூரிகள் அமைக்க வேண்டுமென்று சிபார்சு செய்துள்ளது.

ஆகவே, சகல சமூகங்களையும் சேர்ந்த பெண்களின் நன்மைக்காகவும் பெண்கள் பிராந்தியக் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும்.

## மத்திய மாகாண சபையில் கேட்டவை

### — சண்டி —

ஜனாப் எச் எம் பாருக் (ஸ்ரீ ல மு கா)— மாணவர்கள் தொடக்கம் வயோதிபர் வரை பஸ் நிலையங்களில் நாள் கடுக்க பஸ்சுக்காக காத்திருக்கும் பரிதாப நிலையைச் சகிக்க முடியவில்லை.

ஆளும் கட்சிப் பக்கமிருந்து— உங்களுக்குத்தானே ஜீப் இருக்கின்றதே.

ஜனாப் பாருக்— எமக்கு பெஜரோ ஜீப் கிடைத்த பலிக்காக நாம் அதிலே பிரயாணம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நீங்களும் ஜீப்பை விட்டு பஸ்சில் பிரயாணம் செய்து பாருங்கள். அப்பொழுது மக்களின் கஷ்டங்கள் உங்களுக்குப் புரியும்.

போக்குவரத்து அமைச்சர் திரு பத்மகீர்த்தி ஹேமச்சந்திரா— நாம் இன்னும் சில நாட்களில் மத்திய மாகாணத்தில் உள்ள இ போ ச டிப்போக்களைப் பொறுப்பேற்று தனியான பஸ் சேவையாக இயக்குவோம்.

ஜனாப் பாருக்— உங்களது வேகம் போதாது.

முதலமைச்சர் திரு டபிள்யூ பீ பீ திஸாநாயக்கா— நாம் கடுகதியாக பஸ் ஓட்ட விரும்பவில்லை (சிரிப்பு).

ஜனாப் பாருக்— இந்தமாகாண சபையைப் பொறுத்த மட்டில் கடுகதிதான் அவசியம்.

கல்வி அமைச்சர் திரு எஸ் தே இராமநாதன்— பயப்படாதீர்கள். கடுகதியில் பஸ் செலுத்துவோம். (சிரிப்பு)

ஜனாப் பாருக்— மத்திய மாகாணத்தில் "ஸி" டி "ஈ" பஸ் பாதைகள் படுமோசம். ஜனாதிபதி கூட இதனை ஒப்புக் கொண்டுள்ளார். அவர் கூறுவது போன்று நீங்கள் நீதிக்கும் நேர்மைக்குமாக கடமை புரிய வேண்டும்.

...டும்,

அத்துடன் ஒவ்வொரு பாடசாலையும் குறைந்தது நான்கு நிகழ்ச்சிகளையாவது தயாரித்தல் அவசியம்.

போட்டிகள் யாவும் முதலாம் பிரிவு இரண்டாம் பிரிவு, மூன்றாம் பிரிவு என்னும் அடிப்படையில் முறையே ஆண்டு 1, 2 ஆண்டு 3, ஆண்டு 4, 5 வகுப்புக்களுக்கு நடைபெறும்.

தனிப்பாடல்கள், குழுப்பாடல், பேச்சு, குழு நடனம்

தோட்டந் தோறும் நூலகம் திறக்கப்பட்டு, தொழிலாளரது அறிவு மேம்படுத்தப்படுவது அவசியமும், இன்றியமையாததுமாகும்"

தொழிலாளர் தேசிய சங்கப் பொதுச் செயலாளரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான திரு பி வி கந்தையா இவ்வாறு கூறினார்.

...களனிவத்த தோட்டத்தில் நூலகமொன்றை திறந்து வைத்தார். விழாவிற்கு இளைஞர் மன்றத் தலைவர் திரு கே சங்கர் தலைமை வகித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது—

"பல தோட்டங்களில் நூலகம் திறக்கப்பட்டு பின்னர் மூடப்பட்டு விடுகிறது. அவ்வாறான நிலைமைகள் இனிமேலும் ஏற்படக் கூடாது. இவ்வாறான வாசிகசாலைகள் மூலம் தொழிலாளர் தமது அறிவை விருத்தி செய்து கொள்ளல் அவசியம்.

இவ்வாறு அவர் கூறினார். இங்கு தோட்டத் துரையான திரு எல் விமலரட்னவும் உரையாற்றினார்.

(இ—408)

கொழும்பு, ஜூன் 11

பெண்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு பெண்களுக்காக பிராந்தியக் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும்.

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு, கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலியிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இளைஞர் விரக்திக்கான காரணங்களை ஆராய்ந்த ஜனாதிபதி கமிஷன், ஒவ்வொரு மாகாணங்களிலும் பிராந்தியக் கல்லூரிகள் அமைக்க வேண்டுமென்று சிபார்சு செய்துள்ளது.

ஆகவே, சகல சமூகங்களையும் சேர்ந்த பெண்களின் நன்மைக்காகவும் பெண்கள் பிராந்தியக் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு முஸ்லிம் கல்வி மாநாடு கேட்டிருப்பதாக முஸ்லிம் கல்வி மாநாட்டின் நிர்வாக சபைத் தலைவர் ஜனாப் எஸ் எல் எம் ஷாபி மரிக்கார் தெரிவித்தார்.

(இ—007)

# முஸ்லிம் பாடசாலைகளின் கல்வித் தரம் குன்றுவதற்கு, எவ்வித நியாயமும் கிடையாது

## தென் மாகாண கல்விப் பணிப்பாளர்

மாத்தறை, ஜூன் 10

முஸ்லிம் பாடசாலைகளின் கல்வித் தரம் குன்றுவதற்கு எந்தவித நியாயமும் கிடையாது.

தென் மாகாண கல்விப் பணிப்பாளர் திரு எச் கே ரூபசிங்க இவ்வாறு கூறினார்.

தென் மாகாண பாடசாலைகளின் தமிழ்தின விழா அண்மையில் நடைபெற்றது.

காலி மல்ஹறஸ்ஸுல்ஹியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது இவ்விழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தென் மாகாண கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து கூறியதாவது—

"பல இன மக்கள் வாழும் இந்நாட்டில் இன்று சிங்களமும் தமிழும் அரசாங்க மொழியாக ஏற்கக் கொள்ளப்பட்டுள்ளன.

எனவே சிங்கள மொழிக்கு உள்ள அந்தஸ்து இன்று தமிழ் மொழிக்கும் வழங்கப்பட்டுள்ளதால் தமிழ் மொழியின் வளர்ச்சியில் தமிழர்களும், முஸ்லிம்களும் மேலும் கரிசனை கொள்ள வேண்டும்.

முஸ்லிம் பாடசாலைகளின் கல்வித் தரம் குன்றி வருவதாக அடிக்கடி புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

போதிய ஆசிரியர்களும், ஏனைய வசதிகளும் இருக்கும் போது முஸ்லிம் பாடசாலைகளின் கல்வித் தரம் குன்றுவதற்கு எந்தவித நியாயமுமில்லை.

முஸ்லிம் பெற்றோர்களும், ஆசிரியர்களும் முஸ்லிம் மாணவர்களின் கல்வியில் கரிசனை கொண்டு தமது கடமையை ஒழுங்காகச் செய்வார்களானால் கல்வித் தரத்தை உயர்த்த முடியும்" என்றார்.

இவ்வைபவத்தில் தமிழ்மொழி பாடசாலைகளுக்குப் பொறுப்பான கல்வி அதிகாரி ஜனாப் எம் எச் எம் ஜஉபர் உட்பட பலர் உரையாற்றினர்.

இவ்வைபவத்தில் காலி தமிழ் கல்வி அதிகாரி அல்ஹாஜ் ஏ ஆர் எம் ஜெலீல், மாத்தறை தமிழ் கல்வி அதிகாரி ஜனாப் எம் எச் எம் சமசுதீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(இ—430)

# அரச, தனியார் தோட்டங்களில் விவசாய செய்கை

பண்டுவஸ்நுவர, ஜூன் 10

குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் உள்ள தனியார் மற்றும் அரசாங்க தோட்டங்களில் இந்த சிறுபோகத்தில் இருந்தே விவசாயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வடமேல் மாகாண சபை விவசாய, உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு ஆர் எம் ஆர் நிமல் பண்டார கூறினார்.

குருநாகல் பண்டுவஸ்நுவர கமநல சேவை மத்திய நிலையத்தில் அமைச்சர் தலைமையில் விவசாயக் கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது—

விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத சகல தரிசு நிலங்களும் விவசாயம் செய்வதற்கு பகிர்ந்தளிக்கப்படும்.

அரசாங்கத்தின் இந்த புதிய திட்டத்துக்கு சகலரும் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார். மற்றும் பலர் அங்கு பேசினர்.

(இ—138)

## 15 லட்சம் வீடமைப்பு திட்டத்தின் கீழ்

# அகலவத்தையில் கிராம எழுச்சி திட்டம்

கொழும்பு, ஜூன் 11

15 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டாவது பிரதேச கிராம எழுச்சித் திட்டம் அகலவத்தை தொகுதியில் மேற்கொள்ளப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை வீடமைப்பு ராஜாங்க அமைச்சரும், களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் இமதியாஸ் பாக்கீர் மாக்கார் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக வலல்லாவிட்ட உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் அமைச்சர் இமதியாஸ் பாக்கீர் மாக்கார் தலைமையில் ஒரு கூட்டமும் நடைபெறும்.

மேல் மாகாண வீடமைப்பு, நிர்மாணத்துறை, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து அமைச்சர் திரு லோரன்ஸ் மாதிவெல —

உணவு, கூட்டுறவு, கைத்தொழில் அமைச்சர் ஜனாப் ஏ எம் யூஸுப், மாகாண சபை உறுப்பினர்களான திருமதி ஸ்ரீமா காரியவசம், திரு மேர்வின் சமரநாயக்க உட்பட மற்றும் பல அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர்.

அமைச்சர் வலல்லாவிட்ட பகுதியையும் அதிகாரிகளுடன் சென்று பார்வையிடுவார்.

(இ—007)

மட்டில் கடுகதிதான் அவசியம்.

கல்வி அமைச்சர் திரு எஸ் தே இராமநாதன்— பயப்படாதீர்கள். கடுகதியில் பஸ் செலுத்துவோம். (சிரிப்பு)

ஜனாப் பாருக்— மத்திய மாகாணத்தில் "ஸி" டி "ஈ" பஸ் பாதைகள் படுமோசம். ஜனாதிபதி கூட இதனை ஒப்புக் கொண்டுள்ளார். அவர் கூறுவது போன்று நீங்கள் நீதிக்கும் நேர்மைக்குமாக கடமை புரிய வேண்டும்.

முதலமைச்சர்— நீங்கள் புதிய யோசனைகளைத் தெரிவியுங்கள். நாம் செயல்படுத்துவோம்.

ஆளுங்கட்சிப் பக்கம்— ஏன் சீனி இல்லாமல் தேநீர் குடிக்கவா சொல்கிறீர்கள்? (சிரிப்பு)

திருலால் விஜயநாயக்க— (ஐ சோ மு) கமஉதாவ என்ற பெயரில் கட்டப்பட்ட வீடுகள் பற்றி மதிப்பீடு பிழை.

ஆளும் கட்சிப்பக்கம்— நீங்கள் எங்களுடன் வாருங்கள் பாதுகாப்பும் தருகிறோம். கட்டப்பட்ட வீடுகளைக் காட்டுகிறோம்.

திரு லால் விஜயநாயக்க— இற்றைவரை இரண்டு லட்சம் வீடுகள் கூட நிர்மாணிக்கப்படவில்லை, உமகளின் பாதுகாப்பு எனக்கு அவசியம் இல்லை.

ஜனாப் பாருக்— அப்படிச் சொல்வது தவறு, அரசாங்கம் பெரும் அளவில் வீடுகளைக் கட்டி இருப்பதை நாம் பார்க்கிறோம்.

அப்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஆரவாரம் செய்தனர்.

திரு விஜயநாயக்க— ஜனாதிபதித் தேர்தல் சர்வஜன வாக்கெடுப்பு ஆகியவற்றில் நடந்த மோசடிகள் எமக்குத் தெரியும்.

ஒரு குரல்— 1970— 1977க்கும் இடையில் எத்தனை வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன, சொல்லுங்கள் பார்ப்போம்.

முதலமைச்சர் 1978 இல் தான சர்வஜன வாக்குப் பிரயோகம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1971 ஆம் ஆண்டில் எத்தனை இளைஞர்கள் பாதைகளில் சுட்டுக் கொல்லப்பட்டதை மறந்து விட்டீர்களா?

திரு விஜயநாயக்க— 1983 இல் சர்வஜன தேர்தல் ஒரு கொள்ளைச் சம்பவமே ஆகும். முன்னாள் ஜனாதிபதி திரு ஜே ஆரே இதனை ஒப்புக் கொண்டுள்ளார்.

முதலமைச்சர் யூ என் பீ இருக்கும் வரைக்கும் இந்நாட்டில் ஜனநாயகம் காப்பாற்றப் படும்.

திரு விஜயநாயக்க தொலைக்காட்சியில் அனைத்தும் ஏமாற்று வித்தைகள் தான் நடக்கின்றன. அது அரசாங்கப் பிரசாரக் குகை.

ஒரு குரல்— சோஸலிசத்துக்காக 30 வருடமாகப் போராடிக் கிடைத்தபலன் என்ன?

தலைவர் ஆளுநரின் கொள்கை விளக்கத்துக்கு அப்பால் செல்கிறீர்கள்.

திரு லால் விஜயநாயக்க— 248 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிருக்க 28 உதவி அரசபிரிவுகளிலே ஜன சக்தித் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. அனைவருக்குமே இத்திட்டம் உதவ வேண்டும்.

ஒரு குரல்— எமது ஜனாதிபதி பொய் பேச மாட்டார். அனைவரையும் அவர் ஆதரிப்பார்.

திரு விஜயநாயக்க— நெஸ்லே கம்பெனியார் நாட்டை விழுங்கி விட்டனர்.

(இ—017)

உலகக்கிண்ண உதைபந்து போட்டி

# 12 இத்தாலிய நகரங்களில்

# மது விற்பனை தடை

## ஆட்டங்கள் நடைபெறும் தினங்கள் கண்டிப்பாக அமுல்

[illegible]ரோம ஜூன் 11

உலகக் [illegible]ண்ண ஆட்டங்கள் நடைபெற்[illegible] தினங்களில் ஆட்டம [illegible]டைபெறும 12 நகரங்களில[illegible] மதுபான விற்பனை [illegible] தடை செய்யப்பட்டுள்ளது.

உதைபந்தாட்ட வன்முறைகளைத் தடுக்கும் ஒரு நடவடிக்கையாகவே ஆட்டத் தினங்களில் மதுவிலக்கை அமுல் நடத்த நகர அதிகாரிகள் முன்வந்துள்ளனர்.

இங்கிலாந்து ரசிகர்களே வன்முறையைத் தூண்டுபவர்கள் என கருதப்படுவதால் இங்கிலாந்த அணியின் ஆட்டங்களில் கலந்து கொள்ளும் சாட்ரினியா தலைநகரான காக்லியாறியில் 48 மணித்தியால மதுவிலக்கை அமுல் நடத்த அந்நகர அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

ஏனைய நகரங்களில் ஒரு நாள் மதுவிலக்கு அமுல் செய்யப்படும். வெரோனா நகர அதிகாரிகள் முழு மாகாணத்துக்கும செல்லுபடியாகும வகையில் மதுவிலக்கை அறிவித்துள்ளனர்.

மதுபாவனை உதைபந்தாட்ட வன்முறைகளுக்குத் தூண்டு கோலாக இருக்கிறது. இதனால் ஆட்டம நடைபெறும தினங்களில் மதுபானம விற்பனை செய்வதையும பகிரங்கமாக மதுவருந்துவதையும நகர அதிகாரிகள் தடை செய்துள்ளனர்.

இத்தடையை மீறுவோர் பேரில் கடும தண்டனை விதிக்கப்படும என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுளது.

(எ—032)

### கிரிக்கெட் போட்டி

வாரியப்பொல, ஜூன் 10

வாரியப்பொல ஸ்ரீ சுமங்கள மத்திய கல்லூரி "ஏ" அணிக்கும "பீ" அணிக்கும இடையில் ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர் கிரிக்கெட் போட்டியொன்று மேற்படி கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய "எ" அணி சகல விக்கெட்டுக்களையும 20 ஓவர்களில் இழந்து 182 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய "பீ" அணி 22 ஓவர்களில் எட்டு விக்கெட் நஷ்டத்துக்கு 183 ஓட்டங்களை எடுத்த இரண்டு விக்கெட்டால் வெற்றி பெற்றது.

[ எ—138]

## மாத்தறையில் கரபந்தாட்டத்தை ஊக்குவிக்க திட்டம்

மாத்தறை ஜூன் 10

மாத்தறை மாவட்டத்தில் கரபந்தாட்டத்தை ஊக்குவிக்க மாத்தறை மாவட்ட கரபந்தாட்டச் சங்கம நடவடிக்கை எடுத்துள்ளது.

கரபந்தாட்ட விளையாட்டுத் துறை சமபந்தமாக இளைஞர்களுக்கும, யுவதிகளுக்கும் பயிற்சிகள் வழங்கப்படும.

கருத்தரங்குகளும நடத்தப்படும. இதன் பொருட்டு ஹக்மனை, மாத்துறை, மொறவக அக்குரஸ்ஸ ஆகிய பிரதேசங்களில் மத்திய நிலையங்களை ஆரம்பிக்கவும மாத்துறை கரபந்தாட்டச் சங்கம நடவடிக்கை எடுத்துள்ளது.

மாவட்டத்தில் சிறந்த வீரர்களைத் தெரிவு செய்து திறமையான மாவட்ட கரபந்தாட்டக் குழுவொன்றை அமைக்கவும, கரபந்தாட்டத்துறையில் ஈடுபடும தற்கான நடுவர்களை பயிற்றுவிக்கவும சங்கம திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சிறந்த கரபந்தாட்டக் கோஷ்டிகளை வரவழைத்து கரபந்தாட்டப் போட்டிகளை அடிக்கடி நடத்தவும் சங்கம் எதிர்பார்க்கிறது.

(எ—430)

### உதைபந்து போட்டி

எருக்கலமபிட்டி ஜூன் 10

எருக்குலமபிட்டி அல்முனார் பொதுநல மன்ற ஏற்பாட்டில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்று அண்மையில் நடைபெற்றது.

எருக்கலமபிட்டி மத்திய கல்லூரி மைதானத்தில் போட்டி நடைபெற்றது.

எருக்குலமபிட்டி பிரக்ஸ் விளையாட்டுக்கழகமும, எருக்குலமபிட்டி சுப்பர் நெஷனல் விளையாட்டுக்கழகமும பங்கு பற்றின.

இப்போட்டியில் சுப்பர் நெஷனல் விளையாட்டுக்கழகம வெற்றியீட்டி சாமபியனானது.

(எ—74)

9 ஆண்டுகளாக

## அப்புத்தளை கரபந்து கோஷ்டி தொடர்ந்து சாம்பியன்

பதுளை ஜூன் 10

அப்புத்தளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கரபந்தாட்டக் கோஷ்டி தொடர்ச்சியாக ஒன்பது வருடங்களா சாமபியனாகியுள்ளது.

பதுளை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கி[illegible]டையே நடைபெற்ற ஆண்கள் கரபந்தாட்டப் போட்டியில் இவ்வருடமும அப்புத்தளை [illegible]கோஷ்டி சாம்பியனாகியது.

[illegible]கியதலா[illegible] "முக்குடமார்" மைதானத்தி[illegible] இடமபெற்ற இறுதிப் போட்டியில் அப்புத்தளை கோஷ்டி பண்டாரவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கோஷ்டியை 15–12, 15–17, 15–9, 15–10 என்ற புள்ளி வித்தியாசத்தில் தோற்கடித்துச் சாமபியனானது.

எம கதிர் முகமமது, எ ஏ முபாரக், உபுல் திசாநாயக ஆகியோர் அப்புத்தளை கோஷ்டி சார்பில் திறமையாக விளையாடினர்.

மத்தியஸ்தர்கள்— திருவாளர்கள் சீ ஏ பி மாரசிங்க, எம குணவர்தன.

(எ—137)

### தொண்டா தலைமையில் திறப்பு விழா

இராகலை ஜூன் 10

நாஹுஓயாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பாடசாலைக் கட்டிடத்தை எதிர்வரும 16ஆம திகதி சனிக்கிழமை கிராமத் தொழிற்துறை அபிவிருத்தி சுற்றுலா பயணத் துறை அமைச்சர் திரு எஸ் தொண்டமான் திறந்து வைப்பார்.

இவ்விழாவில் கல்வி அதிகாரிகள் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் இ தொ கா பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

(எ—265)




## பார்சலோனா ஒலிம்பிக்: செலவை ஏற்பதில் இழுபறி நிலை

பார்சலோனா ஜூன் 11

பார்சலோனா ஒலிமபிக் போட்டியில் பங்கு பெறும நாடுகளின் அணிகளுக்கான உணவு மற்றும இருப்பிடச் செலவை யார ஏறபது என்பதில் இழுபறி ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வரும அணிகளின் விளையாட்டு வீரர்கள் மற்றும அதிகாரிகளின் தங்குமிட உணவு வசதிகளைபார்சலோனா ஒலிமபிக் ஏற்பாட்டார்களே பொறுப்பேற்க வேண்டும.

இவ்வாறு ஸ்பானிய தேசிய ஒலிமபிக் குழு விடுத்தது.

இக்கோரிக்கையை ஏற்பாட்டாளர் குழு நிராகரித்துள்ளது.

நாம அப்படிச் சொல்லவில்லை. சர்வதேச ஒலிமபிக் சங்கத்துடன் நாம செய்து கொண்டுள்ள உடன்படிக்கையின் [illegible]

எதிர்வரும செப்டமபர் மாதம டோக்கியோவில் நடைபெறவிருக்கும சர்வதேச ஒலிம்பிக் சங்கக் கூட்டத்தில் பார்சலோனா ஒலிமபிக் கிராமத்தின் விலைப்பட்டியல் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. நாளொன்றுக்கு ஒருவருக்கு 140 டாலர் என்ற அடிப்படையில் பார்சலோனா ஒலிமபிக் ஏற்பாட்டாளர்கள் தமது விலைப் பட்டியலை இங்கு சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இக்கட்டணம இரண்டு டாலர்களாக இருக்க வேண்டுமென அந்நாட்டு ஒலிமபிக் கமிட்டி தெரிவித்துள்ளது.

பார்சலோனாவே வீரர்களுக்கு இலவச உணவும தங்குமிட வசதியும வழங்க முன் [illegible] றும ஆபிரிக்க நாடுகள் தமது அணியில் இடமபெறும அதிகாரிகளுக்கும இவ்வசதியை அளிக்குமபடி கேட்டுள்ளன.

இதே சமயம பார்சலோனா ஏற்பாட்டாளர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று உலகெங்கும உள்ள 167 அங்கத்தவ நாடுகளும தமது அணிகளின் எண்ணிக்கை அளவைக் குறைக்க முன்வந்துள்ளன.

இதன் பிரகாரம 1992 ஆம ஆண்டு ஒலிமபிக்கில் பத்தாயிரம வீரர்களும ஐயாயிரம அதிகாரிகளும கலந்து கொள்வர்.

எண்ணிக்கையைக் குறைக்கும மற்றுமொரு நடவடிக்கையாக சில நாடுகளே பங்கு பற்றும ஆட்டங்கள் சிலவற்றைப் போட்டியில் இருந்து நீக்கி [illegible]

### கொத்தணி பாடசாலை சாம்பியன்

பதுளை ஜூன் 10

பதுளை கல்விப் பிரதேச பாடசாலைகளுக்கு இடையில் அண்மையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளிலும தர்ம ஆதா ம வி கொத்தணிப் பாடசாலை சாமபியனானது.

மேற்படி போட்டிகள் பதுளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. 17, 19 வயதுக்குட்பட்ட போட்டிகளில் தர்மதூதா கொத்தணிப் பாடசாலை கோஷ்டி சாமபியனானது.

பதுளை மத்திய ம வி கொத்தணிப் பாடசாலை கோஷ்டி இரண்டாமிடத்தைப் பெற்றது.




ஜூன் 12 செவ்வாய்க்கிழமை

ஜூன் 13 புதன்கிழமை

## ஜூன் 12 செவ்வாய்க்கிழமை

### வந்து சேரும் நேரம

| | | | |
|---|---|---|---|
| 0030 | சென்னை | யூ | எல் 122 |
| 0610 | சூரிச், சார்ஜா, மாலைதிவு | பி | பி 602 |
| 0640 | மஸ்கட் | யூ | எல் 210 |
| 0700 | அபுதாபி, மஸ்கட் | ஜீ | எப் 4144 |
| 0800 | டுபாய் | ஈ | கே 800 |
| 0915 | குவைத் | யூ | எல் 228 |
| 1020 | திருச்சி | யூ | எல் 132 |
| 1140 | சென்னை, பம்பாய் | ஐ | சி 573 |
| 1210 | சோபியா, அபுதாபி, பாங்கொக் | எல் | இசட் 595 |
| 1405 | திருவனந்தபுரம | யூ | எல் 162 |
| 1555 | மாலைதிவு | யூ | எல் 102 |
| 1755 | பம்பாய், சென்னை | ஐ | சி 586 |
| 2050 | கராச்சி, மாலைதிவு | பி | கே 774 |
| 2230 | சிங்கப்பூர் | எஸ் | கியூ 402 |
| 2230 | பாங்கொக், அபுதாபி, சோபியா | யூ | எல் 122 |
| 2315 | சென்னை | எல் | இசட் 596 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0130 | டுபாய், லண்டன் | யூ | எல் 503 |
| 0715 | சூரிச், சார்ஜா, மாலைதிவு | பி | பி 602 |
| 0730 | திருச்சி | யூ | எல் 131 |
| 0815 | அபுதாபி, மஸ்கட் | ஜீ | எப் 3145 |
| 0915 | டுபாய் | ஈ | கே 801 |
| 1115 | திருவனந்தபுரம | யூ | எல் 161 |
| 1200 | மாலைதிவு | யூ | எல் 101 |
| 1235 | சென்னை, பம்பாய் | ஐ | சி 585 |
| 1315 | சோபியா, அபுதாபி, பாங்கொக் | எல் | இசட் 595 |
| 1730 | றியாத் | யூ | எல் 271 |
| 1840 | பம்பாய், சென்னை | ஐ | சி 574 |
| 1945 | சென்னை | யூ | எல் 121 |
| 2200 | கராச்சி, மாலைதிவு | பி | கே 775 |
| 2345 | சிங்கப்பூர் | எஸ் | கியூ 401 |
| 2330 | பாங்கொக், அபுதாபி, சோபியா | எல் | இசட் 596 |

## ஜூன் 13 புதன்கிழமை

### வந்து சேரும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0540 | றியாத் | யூ எல் | 272 |
| 0635 | குவைத் | கே யூ | 361 |
| 0650 | லண்டன், டுபாய் | யூ எல் | 504 |
| 0710 | சிப்புல், தஹ்ரேன், கராச்சி | கே எல் | 801 |
| 0745 | ஜித்தா, டஹ்ரேன், றியாத் | எஸ் வி | 346 |
| 0845 | டுபாய், மாலைதிவு | ஈ கே | 802 |
| 1120 | திருவனந்தபுரம | யூ எல் | 162 |
| 1225 | பாங்கொக் | ரி ஜி | 307 |
| 1345 | மாலைதிவு, டுபாய் | ஈ கே | 803 |
| 1545 | சென்னை | யூ எல் | 122 |
| 2005 | சிங்கப்பூர் | யூ எல் | 303 |
| 2025 | மாலைதிவு | யூ எல் | 102 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0125 | டுபாய், சூரிச், லண்டன் | யூ எல் | 523 |
| 0750 | குவைத் | கே யூ | 361 |
| 0830 | திருவனந்தபுரம | கே எல் | 801 |
| 0915 | ஜித்தா, தஹ்ரேன், றியாத் | எஸ் வி | 346 |
| 0930 | சிங்கப்பூர் | யூ எல் | 302 |
| 0950 | டுபாய், மாலைதிவு | ஈ கே | 802 |
| 1215 | சென்னை | யூ எல் | 121 |
| 1325 | பாங்கொக் | ரி ஜி | 308 |
| 1450 | மாலைதிவு, டுபாய் | ஈ கே | 803 |
| 1755 | பம்பாய், கராச்சி | யூ எல் | 181 |
| 1905 | கராச்சி, தஹ்ரேன், சிப்புல் | கே எல் | 802 |
| 1920 | அபுதாபி, குவைத் | யூ எல் | 223 |
| 1930 | மாலைதிவு | யூ எல் | 101 |
| 2115 | சிங்கப்பூர், ரோக்கியோ, நோரிடா | யூ எல் | 456 |

குறிப்பு— யூ எல் — எயர் லங்கா, ஐ சி — இந்தியன் எயர் லைன்ஸ். ஈ கே — எமிரேட்ஸ். எஸ் யூ — ஏரோபுளொட். ஜீ எப் — கல்ப் எயர். யூ டி — யூ ரி ஏ டி எப் — கொன்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ். பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ். எஸ் வி — சவூதியா. எஸ் டி — ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ் ரீ ஜி — தாய் எயர் வேய்ஸ். பி பி பால் எயர். எல் இஸட் — பிரத்தியேக சேவை. எல் டி பிரத்தியேக சேவை. டி கே — பிரத்தியேக சேவை. கே எல் — றோயல் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் மாற்றம் பற்றி அறியத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 452218 (விமான நிலையம)

வில்லை. சர்வதேச ஒலிம்பிக் சங்கத்துடன் நாம செய்து கொண்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம ஆட்டங்களில் ஈடுபடும வீரர்களுக்கு மாத்திரமே நாம இலவச வசதிகளைச் செய்து தரக் கடமைப்பட்டுள்ளோம.

அவர்களுடன் வரும அதிகாரிகளுக்கு அல்ல என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஸ்பானிய தேசிய ஒலிம்பிக் சபையின் வருடாந்தக் கூட்டத்திலேயே இச்சர்ச்சை எழுந்தது. 1992 ஆம ஆண்டு ஒலிம்பிக் போட்டியை ஏற்று நடத்த முன் வந்த பாசலோனா தாம வழங்கவிருக்கும வசதிகளில் ஒன்றாக இலவச உணவு மற்றும இருப்பிட வசதியைக் குறிப்பிட்டிருந்ததாக இம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

## கண்டியில் றகர் ஆட்டம்

கண்டி ஜூன் 10

கடந்த வாரம கண்டியில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான றகர் போட்டிகள் விறுவிறுப்பாக இருந்தன.

கண்டி திரித்துவக் கல்லூரி, கிங்ஸ்வூட், தர்மராஜா, சில்வர் ஸ்டர் வித்தியார்த்த கொழும்பு ஆனந்த, வெஸ்லி கல்லூரிகள் இப் போட்டியில் கலந்து கொண்டன.

திரித்துவக் கல்லூரி வித்தியார்த்தக் கல்லூரியை 10—0 புள்ளிகளினாலும், ஆனந்தாக் கல்லூரி கிங்ஸ்வூட் கல்லூரியை 12-3 புள்ளிகளினாலும வெற்றி கொண்டன.

கண்டி சில்வஸ்டர் கல்லூரி கொழும்பு ஸாஹிராக் கல்லூரியை 14—0 புள்ளிகளினால் தோற்கடித்தது. [எ-017]

ளுக்கு இலவச உணவும தங்குமிட வசதியும வழங்க முன் வந்திருக்கும முதல் நகரமாகும. ஆனால் பல வறிய ஆசிய மற்

ஆட்டங்கள் சிலவற்றைப் போட்டியில் இருந்து நீக்கி விடவும முடிவு செய்யப்பட்டுள்ளது. (எ-032)

பதுளை மத்திய மகா வித்தியாலயத் தனிப் பாடசாலை கோஷ்டி இரண்டாமிடத்தைப் பெற்றது. (எ-037)




### 12—6—1990

காலை -

5-00 நாதாஞ்சலி

5-05 தோத்திரமாலை மஹிஷா சுரமர்த்தினி சுலோகம

5-30 பாமாலை தையல் நாயகி திருவிருத்தம

5-45 சைவ நற்சிந்தனை

5-50 இஸ்லாமிய நற்சிந்தனை எம். ஏ. ஹபீபுர் ரஹ்மான்

5-55 பக்திப் பாடல்கள்

6-00 வர்த்தக சேவை

6-30 செய்திகள்

6-40 செய்தித்தாள் கண்ணோட்டம

6-50 அறிவிப்புகள்

7-00 வர்த்தக சேவை

7-30 பாடசாலைக் கூட்டு நிகழ்ச்சி

7-45 மாகாணச் செய்திகள்

7-50 வர்த்தக சேவை

8-00 நாதவினோதம

8-15 மெல்லிசைப் பாடல்கள்

8-30 மாதர் மஜ்லிஸ் பிரதி லதீபா ஹாசிம

9-00 வர்த்தக சேவை

பகல் -

10-00 இசையமுதம

10-30 பாட்டு - எஸ் சிவானந்தராஜா

11-00 வீணைக் கச்சேரி எஸ் பாலச்சந்தர்

12-00 வர்த்தக சேவை

12-45 செய்திகள்

12-55 அறிவிப்புகள்

1-00 வர்த்தக சேவை

மாலை -

6-00 செய்திகள்

6-10 அறிவிப்புகள்

6-15 சைவநெறி

6-30 பொலிஸாரும நாமும

6-45 கிறிஸ்தவ சிறுவர் நிகழ்ச்சி

7-00 இளைஞர் மன்றம - த தேவதாஸ்

7-30 மெல்லிசைப் பாடல்கள்

7-50 உலகச் செய்திகள்

இரவு -

8-00 தர்ஜமதுல் குர்ஆன்

8-05 "மறக்க முடியாத என் இலக்கிய நினைவுகள் நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சிகளின் தொகுப்புரை

8-25 முஸ்லிம செய்திகள்

8-30 நாடகம "அடிமைகள்"

8-55 ஸலவாத்தில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும

9-00 செய்திகள்

9-10 அறிவிப்புகள்

9-20 பக்திப் பாடல்கள்

9-30 கலையகத்தில் கலைஞர் தவில் வித்துவான் அளவெட்டி கே கணேஷ்

10-00 தாளவாத்திய கச்சேரி ரி ஜெயசுந்தரம

10-30 மெல்லிசைப் பாடல்கள்

10-45 பஜன் எஸ் ஜானகி

11-00 ஒலிபரப்பு முடிவு




## ரூபவாஹினி

### 12—6—1990

கல்விச் சேவை

9-30 பி பி சி கம்பியூட்டர் நிகழ்ச்சி

9-55 பௌதிகவியல் - சிங்களம

10-20 தாவரவியல் - சிங்களம

10-45 இரசாயனம - தமிழ்

11-10 விலங்கியல் - தமிழ்

11-35 என் எச் கே பில்ம சிக் மன்ட்ஸ் சிங்களம

12-00 ஒளிபரப்பு முடிவு

மாலை

4-30 "கோச்சிங" நிகழ்ச்சி - 10

5-00 செய்திகள் - சிங்களம

5-15 சிறுவர் களஞ்சியம

5-30 கண்டி லந்த

6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி

6-15 கார்ட்டூன் படம

6-30 செய்திகள் தமிழ்

7-00 கலை அரங்கம

7-30 அனாட்டட் கனாட்டட் - டெலிநாடகம

8-00 செய்திகள் சிங்களம

8-30 லஹிரு

9-05 சாபக் ரேக்கா

9-30 செய்திகள் ஆங்கிலம

10-00 த வேல்ட் அப் ஸ்போர்ட்

11-00 ஒளிபரப்பு முடிவு

## ஐ. டி. என்.

6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி

6-15 யூ எஸ் எஸ் ஆர் படம

6-30 செய்திகள் சிங்களம

7-00 சீ தம்பப

7-30 டூன் கிளப்

8-00 நியூ ஓட் அப்பின்

8-30 இன்சேர்ச் ஆப் த பாஸ்

9-00 ரொக்போட் பைல்ஸ்

10-00 செய்திகள் ஆங்கிலம

10-26 ஒலிபரப்பு முடிவு

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

# மக்களிடம் சென்று பிரச்சினைகளை தீருங்கள்

## அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுரை

கொழும்பு, ஜூன் 11

அலுவலகங்களில் குவிந்து கிடக்கும் ஆவணங்களுக்கு மத்தியில் அமர்ந்து கொண்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முயலாமல், சகல அரசாங்க அதிகாரிகளும் மக்களைத் தேடிச் சென்று பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.

ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாசா சகல அரசாங்க அதிகாரிகளுக்கும் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை பொலன்னறுவைப் பகுதியிலுள்ள அரசாங்க அதிகாரிகளை சந்தித்து உரையாற்றிய போது ஜனாதிபதி மேற்கண்ட உத்தரவை பிறப்பித்தார்.

அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் இதில் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது அரசாங்க அதிகாரிகளுக்கு தேவைப்படும் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் ஜனாதிபதி இங்கு விளக்கிக் கூறினார்.

வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சர் திரு ஜீ. டீ. மகிந்தசோம உட்பட மாகாண சபை உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி இங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:

நான் மாவட்டம் தோறும் சென்று அரசாங்க அதிகாரிகளை சந்தித்து வருகிறேன். இதன் மூலம் மக்களுக்கு அரசாங்கத்தின் நேரிய பாதையை புலப்படுத்தலாம். மக்கள் அரசாங்கத்தின் செயல் திட்டங்களை புரிந்து ஒத்துழைப்பு வழங்கினால் தான் அத்திட்டம் முழுமை பெறும்.

நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட பயங்கர நிலைமைகளினால் ஜனநாயகம் வீழ்ச்சியடைந்தது. பயங்கர நிலைமைகளுக்கு எதிராக மக்கள் செயல்பட்டு ஜனநாயகத்தை காப்பாற்றினார்கள். இதனால் ஜனநாயகத்தை பேணுவது எங்கள் அனைவரினதும் கடமையாகும்.

மக்கள் எம்மை பிரதிநிதிகளாக நியமித்தது பல உயிர்த் தியாகங்களைச் செய்தே. அதற்காக அவர்கள் இரண்டு விடயங்களை எம்மிடம் எதிர்பார்க்கின்றனர்.

ஜனநாயக ரீதியில் செயல்படும் இந்த நாட்டில் தேர்தல் மூலம் நியமிக்கப்பட்ட தங்கள் பிரதிநிதிகள் ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும்.

மக்கள் மது அருந்துபவர்களாக இருக்கலாம் ஆனால் தங்களது பிரதிநிதிகள் மது அருந்துவதை அவர்கள் விரும்புவதில்லை.

ஒழுக்கம், தர்மம், கருணை போன்ற நெறிகளை தங்களுடைய பிரதிநிதிகள் கடைப்பிடிக்க வேண்டும் என மக்கள் கருதுகின்றனர். இதுவே அவர்கள் எதிர்பார்க்கும் முதலாவது விடயம்.

இரண்டாவதாக தங்களது ஏழ்மையை போக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

மக்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஜாதி, மத இன பேதங்களை மறந்து அவர்களது வறுமையை போக்க வேண்டியது நமது கடமை.

அத்துடன் அவர்களுக்கு மேலதிக வருமானங்களைப் பெறக் கூடிய வழிமுறைகளை செய்து கொடுக்க வேண்டும். இதற்கு மக்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

கிராம சேவையாளர்கள் தங்கள் கிராமத்தில் உள்ள சகல குடும்பங்களைப் பற்றிய முழு தகவல்களையும் அறிந்திருக்க வேண்டும். கிராம சேவையாளர்களுக்கு 300 குடும்பங்களை உள்ளடக்கிய பகுதியே பொறுப்பாக விடப்பட்டுள்ளது.

இதனால் கிராம மக்களின் எண்ணிக்கை குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை, குறைகள், வருமானம் போன்ற விபரங்களை கணக்கெடுத்து அறிந்து கொள்ளலாம்.

வேலை அற்ற இ… க்கு சுய வேலைவாய்ப்… படுத்தி கொடுத்த… களையும் வழங்கி … மானத்தை பெற வசதி… கொடுக்கலாம். இத… சேவகர்கள் முன் நி… டும்.

இன்று வங்கிகள் … உதவ முன்வ… கடன்களை வாங்… களை ஏற்படுத்… இது நல்ல சந்த…

எதிர்வரும் கா… சார்பானவர்களு… வாய்ப்புகள் … அடிப்ப… கள் வழங்கப்படும்.

விவசாயத்திற்கே நா… டம் கொ… 1… மூலம் 10… உற்பத்தி செய்ய மு… வேண்டும்.

கிராம மட்டத்தி… நாட்டை அபிவி… வேண்டும். அ… ளுக்கு மத்தியில் … தொண்டு நாட்… செய்ய முடியா…

நேரடியாக … உள்ள இடங்க… மக்களை சந்தி… வேண்டும். … நாட்டை அபிவி… இட்டுச் செல்…

இவ்வாறு ஜனா… னார்.

# சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம் லீக் தலைவர்களின் பங்களிப்பு பற்றி கலீல்

இலங்கை சுதந்திரப் போராட்டத்தின் போது அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவர்கள் தமிழ், சிங்கள தலைவர்களுடன் சேர்ந்து போராடி இருக்காவிட்டால் நாட்டின் தலைவிதியே வேறு விதமாக மாறி இருக்கும்.

அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவர் தேசமான்ய டாக்டர் எம். சி. எம். கலீல் இவ்வாறு கூறினார்.

40 ஆவது முறையாகவும் முஸ்லிம் லீக்கின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட பின் லீக்கின் மத்திய சபைக் கூட்டத்தில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இந்த முறையும் என்னை தலைமைப் பதவிக்கு தெரிவு செய்ததன் மூலம், முஸ்லிம் சமூகம் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்வளவு நீண்ட காலமாக எவரும் எந்த இயக்கத்திலும் தலைவராக இருக்கவில்லை.

முஸ்லிம் லீக் இலங்கை வரலாற்றில் மாபெரும் சாதனைகளை புரிந்துள்ளது.

இலங்கை சுதந்திரப் போராட்டத்திலும் முஸ்லிம் லீக் பங்கு கொண்டது. அதன் மூலம் அது அழியாப் புகழை தேடிக் கொண்டுள்ளது.

தலைவர்கள் நேர்மையானவர்களாகவும் நாட்டுப் பற்றுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் முஸ்லிம் லீக் தலைவர்கள் இலங்கை முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுத் தந்துள்ளனர்.

முஸ்லிம் பாடசாலைகள் தோன்றி இஸ்லாமிய தனித்துவம் பேணப்படவும், பள்ளிவாசல் பரிபாலனம் முதல் விவாக விவாகரத்துச் சட்டம் கொண்டு வரப்பட்டு இலங்கை முஸ்லிம்களின் உரிமை பாதுகாப்பதிலும் லீக் பெரும் சேவை செய்துள்ளது.

இவை சரித்திரத்தில் சாதனைகளாக இருந்த போதிலும் எம் மத்தியில் உள்ள இளைய தலைமுறையினரில் பலர் அதனை அறியாது இருக்கின்றனர்.

ஒரு சமூகத்தின் வரலாற்றை உணர்வதால் அதன் எதிர்காலத்திற்கு எத்தனையோ பயன்கள் உண்டு.

அண்மைக் காலத்தில் ஜனநாயகத்தை பாதுகாப்பதிலும் திரு பிரேமதாசவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதிலும் முஸ்லிம் லீக் பெரும் சேவை செய்துள்ளது.

நாம் எதனையும் பெற [illegible]மைப் போராட்டம் நடத்தவில்லை. சமூகத் தேவையை உணர்ந்து எவ்வித எதிர்பார்ப்புகளும் இன்றி கடமைகளை செய்து வருகிறோம்.

இப்படி அவர் கூறினார்.

முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர், வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் ஐ. தே. க. உறுப்பினர் அல்ஹாஜ் பதூர் மௌலானா, முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைவர் அல்ஹாஜ் எஸ். எல். எம். ஷாபி மரிக்கார், வர்த்தக, வியாபாரத் துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர், துறைமுக, கப்பல்துறை ராஜாங்க அமைச்சர் ஜனாப் எம். ஈ. எச். மஹ்ரூப், ஐ. தே. க. எம். பி. எம். ஏ. அப்துல் மஜீத், முன்னாள் நிதி அமைச்சர் ஜனாப் எம். எச். எம். நெய்னா மரிக்கார் ஆகியோரும் இங்கு உரையாற்றினர்.

[இ-ற]

## ஜனசக்தி உதவி பெறுவோர் சுய தொழில்களை ஏற்படுத்தி கொள்ள வேண்டும்

### சுகாதார மகளிர் விவகார அமைச்சர்

இராகலை ஜூன் 10

ஜனசக்தி உதவியைப் பெறுவோர் சுய வருமானம் பெறுவதற்கு ஏதாவது சுயதொழில்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

தையல், பின்னல், தச்சுவேலை விவசாயம் போன்ற ஏதாவது ஒன்றை தமக்கென ஏற்படுத்தி சுயவருமானம் பெற சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

## உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள்

கொழும்பு, ஜூன் 11

விரைவில் நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைக் கண்காணிப்பதற்காக வெளிநாடுகளில் இருந்து தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைப்பது தொடர்பாக அரசின் கவனம் திரும்பி உள்ளது.

கண்காணிப்புக் குழுக்களை தேர்தல் காலத்தில் அழைப்பது மிக முக்கியமானது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பிரதான இடதுசாரி முன்னணி இத்தேர்தலில் வெளிநாட்டு கண்காணிப்புக் குழுவை [illegible] அரசிடம் கோரிக்கை விடுக்க தயாராக உள்ளது.

இவ்வாறு அதாவுத செனவிரத்ன … தெரிவித்தார்.

இதன் அவசியம் பற்றி அரசு …

## ஐ. தொ. கா தலைவராக வி. பி. கணேசன் தெரிவு

### செயலாளர் அஷ்ரப் அஸீஸ்

கொழும்பு, ஜூன் 11

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக திரு வி. பி. கணேசன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். …

… தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் சபைக் கூட்டம் நேற்று முன்தினம் தெமட்டகொட … வீதியில் …

…ரஸ் தலைவர் … டத்திற்கு தலை… கூட்டம் நடத்த…

இந்தக் கூட்ட… தலைவர்களில் ஒரு… எஸ். மாணிக்க…

வதற்கு ஏதுவாக சுயதொழில் களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும.

இவ்வாறு சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி, ரேணுகா ரணவீர இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வலப்பனை உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து அமைச்சர் பேசுகையில் கூறியதாவது-

எமது ஐ தே க அரசு வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேமபடுத்துவதற்காக ஜனசக்தி திட்டத்தின் கீழ் உதவி வருகின்றது-

உதவியைப் பெற்றுக் கொண்டு எந்தவித ஆர்வமும இல்லாமல் இருந்துவிடக் கூடாது. கால்நடை வளர்த்தல், சுயவருமானம பெற சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும.

ஜனசக்தி உதவி ஒருவருக்குக் கிடைத்து வரும காலஙகளிலேயே இதனைச் செய்து கொள்ளல் அவசியம.

நெதர்லாந்து உதவியுடன் சுமார் 3000 யுவதிகள் வலப்பனை பிரதேசத்தில் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தேர்தல் முடிந்து விட்டது இனிமேல் எந்தவித பாகுபாடோ, பழி வாஙகலோ நடைபெற இடமளிக்க மாட்டோம- இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவரையும ஒரே கண்ணோட்டத்திலேயே நாம பார்க்கின்றோம-

இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ-265)

தொடர்பாக அரசின் கவனம திருமபி உள்ளது-

இதன் அவசியம் பற்றி அரசு ஆராய்ந்திருக்கிறது- இதனை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்தார்.

ஐக்கிய சோஷலிச முன்னணி உறுப்பினர் திரு அதாவுத செனரத்தின இது பற்றிக் கூறியதாவது.

கடந்த தேர்தல்களின் போது கிடைத்த அனுபவத்தைக் கொண்டு இவ்வாறு வெளிநாட்டு தமாறு அரசிடம கோரிக்கை விடுக்க தயாராக உள்ளது-

இவ்வாறு அத்தாவுத செனவிரத்ன கருத்து தெரிவித்தார்.

எதிர்வரும செப்டமபர் மாதத்தில் நடைபெற உள்ள இத்தேர்தலுக்கான ஏற்பாடுகளைத் தேர்தல் ஆணையாளர் திரு சந்திரானந்த டீ சில்வா மேற்கொண்டு வருகிறார்.

இத்தேர்தலில் வாக்களிக்க தகுதியானோரின் எண்ணிக்கை ஒரு கோடியாக இருக்குமென்றும கணக்கிடப்பட்டு உள்ளது-

[இ—007]

காரியாலய தலைவராக திரு வி பி கணேசன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்,

பொதுச் செயலாளராக ஜனாப் அஷ்ரப் அஸீஸ், நிதிச் செயலாளராக இரா தர்ம லிஙகம அகியோரும தெரிவு

ஜனநாயக தொழிலாளர் காஙகிரஸின் பொதுச் சபைக் கூட்டம நேற்று முன்தினம் தெமட்டகொட வீதியில் அமைந்துள்ள அதன் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது-

காலஞ்சென்ற ஐ தொ காஙகி

இந்தக் கூட்ட... தலைவர்களில் ஒருவ... எஸ் மாணிக்க... தாஙகினார்- ...கள் எவரும க... மதிக்கப்படவில்...

இந்த பொது... தில் பொதுச் செ... ...

...கான தெரிவும நடை... பொதுச் ... ஜனாப் அஷ்ரப் அஸீ... யின்றித் தெரிவானார்... செயலாளராக திரு இர... லிஙகம போட்டியிட்டு ...யீட்டினார்-

# முஸ்லிம் மகளிர் வித்தியாலய

# கல்வி தரத்தை

## உயர்த்த ஆசிரியர்கள்

## உறுதிகொள்ள வலியுறுத்து

கண்டி ஜூன் 10

தமக்கு வசதியான ஒரு பாடசாலையில் இருந்து கொண்டு அதிக லீவையும எடுத்த மாணவர்களின் கல்வியை பாழடிக்க விருமபுவது சரியல்ல. கண்டி நகரின் முஸ்லிம குழந்தைகளுக்கென இயஙகும ஒரே ஒரு மகளிர் வித்தியாயலயத்தின் கல்வித் தரத்தை உயர்த்த முஸ்லிம ஆசிரியர்கள் உறுதி கொள்ள வேண்டும.

இவ்வாறு கூறினார் மத்திய மாகாண சபையின் ஸ்ரீலஙகா முஸ்லிம காஙகிரஸ் கட்சி உறுப்பினர்களின் பிரதம அமைப்பாளரான சட்டத்தரணி ஜனாப் எச் எம பாருக்.

கண்டி பத்யுத்தின் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் வருடாந்த பாடசாலை அபிவிருத்தி சஙக பொதுக் கூட்டத்தில் பிரமத அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டத்துக்கு வித்தியாலய அதிபர் செல்வி எச் பௌஸியா மீன் தலைமை தாஙகினார்.

பெருந்திரளான பெற்றோர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சஙக உப தலைவர்களுள் ஒருவரான ஜனாப் பாரூக் தொடர்ந்த பேசுகையில் கூறியதாவது-

பதியுத்தின் மஹ்மூத் முஸ்லிம மகளிர் கல்லூரி பெரும சிரமஙகளுக்கு மத்தியிலே உருவாக்கப்பட்டது;

முஸ்லிம பெண் பிள்ளைகளின் நலனுக்காக உருவாக்கப்பட்ட இக்கல்லூரியின் மாணவிகள் இஸ்லாமிய கலாசார பண்பாட்டில் பர்தாவை அணிந்த பஸ்ஸில் பிரயாணம செய்வதன் மூலம அதனைப் பார்த்து சின்

# மத்திய கல்லூரியை தரம் உயர்த்தக் கோரிக்கை

கொழும்பு, ஜூன். 11

முன்வானை அல்முபாரக் மத்திய கல்லூரியை தேசிய பாடசாலையாகக் தரம உயர்த்த வேண்டும-

கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலியிடம களுத்துறை மாவட்ட முஸ்லிம சஙகம இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது-

உடுகா...பொலை மகா வித்தியாலயத்தில் கல்வி அமைச்சின் நடமாடும செயலகச் சேவை அண்மையில் நடைபெற்றது-

அஙகு வைத்தே அத்துலத் முதலியிடம பிரஸ்தாப வேண்டுகோள் விடுக்கப்பட்டது-

களுத்துறை மாவட்ட முஸ்லிம சஙகத்தின் சார்பாக இம மாவட்டத்தில் கல்வித் துறையில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளை எடுத்துரைத்தது-

மேல் மாகாண ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ் சாலிஹ் ...மீக் முகமமது இப் பிரச்சினைகளை மேல் மாகாண கல்வி கலாசார அமைச்சர் திரு சுசில் ...ராஜபக்ஷவைக்கும மாகாணக் கல்விப் பணிப்பாளர். அமைச்சரின் செயலாளர் அகி... ...ட்டில் செய்த பலர் இன்று வாய்மூல ...ளைமாகி விட்டனர்.

இவ்வாறு அவர் ... கூறினார் ... கோட்டக் கல்வி அதிகாரி திரு எச் ... ...எக்கநாயக்காவும ... னார்.

(ஐ-017)

யோருக்கும எடுத்துக் கூறினார்-

(எ-007)


# ...ரக வாகன சாரதி

சென் அந்தனிஸ் றாபிஙஸ் (பிரை) லிமிட், நிறுவனத்திற்கு கனரக வாகனஙகளைச் செலுத்தும தகைமையுள்ளவரும, குறைந்தது 3 வருட அனுபவமுள்ளவருமான சாரதி ஒருவர் தேவை. வயது 30—45 க்கு உட்பட்டவராகவும புத்தளத்தில் தஙகியிருந்து பாலாவி தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடியவராகவும இருக்க வேண்டும.

விபரஙகள் சகிதம உறவினரல்லாத இருவரின் சிபார்சுடன் உடனடியாக விண்ணப்பிக்கவும.

முகவரி:

ஆளணி முகாமையாளர்
சென் அந்தனிஸ் றாபிஙஸ் (பிரை) லிமிட்
516 ஸ்ரீ சஙகராஜ மாவத்த
கொழுமபு-10



# தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்க...

இலங்கையிலும் வெளிநாட்...
அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்...
நூல்கள் தொடர்பா...
உங்கள் தேவைகளு...
விஜயம் செய்யுங்க...



எம். டி. குணசே...
அண்ட் கம். லி...
217. ஒல்கொட் மாவத்...
கொழும்பு—11
தொலை...பேசி 23981—84



இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5, குணசேன மாவத்தை, கொழும்பு 12 வெளியீடு தபால் பெட்டி இல 1613, வெளியீட்டுத் திகதி 12 ஜூன் 1990.

...ATHI, — 5, Gunasena Mawatha, Colombo 12, P. O. Box 1613.